Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ தை 7 ஆம் நாள் ஷஃபான் 13 (20-1-62) சனிக்கிழமை இதழ் 291




### மரண தண்டனை திருத்த

# மசோதாவுக்கு எதிர்ப்பு

## எதிர்த்து வாக்களிக்க எதிர்க்கட்சிகள் முடிவு

### " நீதி பரிபாலனத்தில் அரசாங்கம் தலையிடுகிறது "

—என். எம்.

கொழும்பு, வெள்ளி

**கொலைக்குச் சதிசெய்யும் குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கும் புதிய திருத்த மசோதாவை லங்கா சமசமாஜக் கட்சி உட்பட சகல எதிர்க்கட்சிகளும் எதிர்த்து பார்லிமெண்டில் வாக்களிக்குமென டாக்டர் என். எம். பெரேரா கூறினர்.**

"அரசாங்கத்தைச் சாகடிக்கும் ஒரு நடவடிக்கை இருக்குமானல் அது இந்த மசோதாதான். நீதிபரிபாலனத்தை அரசாங்கம் அவமதிப்புக்குள்ளாக்கி இருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பை புறக்கணிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

மசோதா சம்பந்தமான செய்தி வெளியானதிலிருந்து நான் பலரைச் சந்தித்தேன். ஒருவராவது இம்மசோதாவைப்பற்றி நல்வார்த்தை சொல்லவில்லை. இந்நாட்டுமக்கள் பழிவாங்குபவர்களல்ல. புத்தரக்கித்தவின் குற்றம்பற்றி நான் பூரணமாக உணர்ந்திருக்கிறேன். ஆனல் 5 நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்திருக்கிறது. ஆனல் அரசாங்கம் இதுசம்பந்தமாக எடுத்துள்ள பழிவாங்கும் நடவடிக்கை அதிர்ச்சியை அளித்துள்ளது." என்றும் டாக்டர் என். எம். பெரேரா கூறினர்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இதுபற்றிக் குறிப்பிடுகையில் இதர எதிர்க்கட்சி அங்கத்தினர்களுடன் பேச்சு நடத்தியதாயும், மசோதாவை எதிர்க்க தாங்கள் ஏற்சனவே தீர்மானித்துவிட்டதாகவும் கூறினர்.

மசோதாவை சமஷ்டிக்கட்சி கடுமையாக எதிர்க்குமென சமஷ்டிக்கட்சிப் பிரதிநிதி ஒருவர் கூறினர். அதற்கான 3 காரணங்களை அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

1. சிலர் நீதிமன்றத்தினல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிருர்கள். தண்டனை விதிக்கப்பட்டபின் அதை மாற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது.

2. ஒரு கைதிக்கு பிரிவிக்கவின்சிலுக்கு அப்பீல்செய்ய உரிமையுண்டு; இது மறுக்கப்பட்டிருக்கிறது.

3. ஒரு கைதி கவர்னர் ஜெனரல் அல்லது மகாராணிக்கு கருணை காட்டுமாறு விண்ணப்பிக்க உரிமை உண்டு. இந்த உரிமையும்கூட மறுக்கப்பட்டிருக்கிறது. அரசியல், சட்ட நிர்வாகம் ஆகியன திருத்த மசோதாவினல் அபாயத்திற்குள்ளாகியிருக்கிறது.

## ராணுவ ஆட்சி கவிழ்ந்தது

### டொமினிக்கனில் மீண்டும் குத்துக்கரணம்!

லண்டன், ஜன. 19

டொமினிக்கன் குடியரசில் இருதினங்களுக்குமுன் ஆட்சியைக் கைப்பற்றிய சிவில், ராணுவக்குழு கவிழ்க்கப்பட்டதாயும், புதிய ஜனதிபதி ஒருவர் பதவி ஏற்றிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. வாஷிங்டனில் ராஜாங்க இலாகா இதை ஊர்ஜிதம் செய்தது.

## லோகியா நேருவை எதிர்ப்பார்

புதுடில்லி, ஜன. 19

52 வயதான டாக்டர் ராம் மனேகர் லோகியா வருகிற பொதுத் தேர்தலில் பிரதம மந்திரி நேருவை எதிர்த்துப் போட்டியிடுவார். டாக்டர் லோகியா இந்தியசோஷலிஸ்ட் கட்சியின் ஸ்தாபகராவர். டாக்டர் லோகியாவைத் தவிர வேறு எவரும் திரு. நேருவுக்குப் போட்டியாக நிற்கவில்லை.

முன்பு இரு தேர்தல்களில் நேருவை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் கட்டுப்பணத்தை இழந்திருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

—

வாஷிங்டன், ஜன. 19

ஜனதிபதி கென்னடியும், ஐ. நா. காரியதரிசி திரு. யுதாண்டும் இன்று சந்தித்து மேற்கு நியூகினிபற்றி விவாதித்தனர்

## வழக்கறிஞர்கள் கடும் எதிர்ப்பு

### 24-ந் திகதி பொது சபை கூட்டம்

கொழும்பு, வெள்ளி

**பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட மரணதண்டனை விசேஷவிதி மசோதாவை ஆட்சேபித்து கண்டனம் தெரிவிக்கும்பொருட்டு வருகிற 24ம் திகதி வழக்கறிஞர்களின் பொதுச் சபைக் கூட்டத்தை நடத்த வழக்கறிஞர் சபை முடிவுசெய்துள்ளது.**

நீதிமன்ற,நீதிபரிபாலன விஷயத்தில் அரசாங்கம் "தலையிடுவதை" எதிர்ப்பதாகவழக்கறிஞர்சபை ஒரு நகல் தீர்மானத்தைத் தயாரித்துள்ளது.

வழக்கறிஞர்கள் சபை நேற்றுக் கூடியபோது அநேக வழக்கறிஞர்கள் ஆஜராகியிருந்தனர். பண்டாரநாயக்கா கொலை வழக்கிலும், பின் அப்பீலிலும் அரசாங்கதரப்பில் ஆஜரான திரு. சிட்டியும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

நகல் தீர்மானம் வருகிற பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த மசோதாவைக் கொண்டுவரவேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாயும், மசோதா நிறைவேறுவதைத் தடுக்க சகல நடவடிக்கைகளையும் வழக்கறிஞர்கள் சங்கம் எடுத்துக்கொள்ளும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

## மார்ட்டின் வீதி இரட்டைக் கொலைவழக்கு

### 29ம் திகதி ஒத்தி.வைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மார்ட்டின் வீதி இரட்டைக் கொலை வழக்கு விசாரணை இன்று மீண்டும் ஆரம்பமானது. தொண்டமனுறைச்சேர்ந்த கருணம்பிகை, கே. ஜயரத்னம், சப்-இன்ஸ்பெக்டர் பெரேரா, கான்ஸ்டபிள் ஜே. குமாரதீன், சார்ஜண்ட் விக்ரமநாயகா ஆகியோர் சாட்சியமளித்தபின் விசாரணை வருகிற 29ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# இஸ்ரவேலில் மொழிப் பிரச்சினை இல்லை

## சிறுபான்மை மொழிகளுக்கும் சமத்துவம் உண்டு

### யாழ்ப்பாணத்தில் இஸ்ரவேல் பிரதிநிதி பேச்சு

யாழ்ப்பாணம், சனி

**"இஸ்ரவேலில் பாஷைப்பிரச்சினை தோன்றவில்லை. ஆனல் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் இருந்ததுபோலவே பத்துவீதம் பேசப்படும் அரபி பாஷைக்கும் ஏனைய சிறுபான்மை மொழிகளுக்கும் இஸ்ரவேலில் சமத்துவம் இருக்கிறது. உலகின் பல பாகங்களிலும் இருந்து யூதர்கள அங்கு குடியேறினர்கள்; பெரும்பான்மையோர் ஆங்கிலமே பேசக்கூடியவர்களாகவும், கருமங்கள் ஆற்றுவதற்கு ஆங்கிலமே உபயோகிக்கக்கூடியதாகவும் இருந்தது. இதனல் பாஷைப்பிரச்சினை அங்கு தோன்றவில்லை."**

இவ்வாறு நேற்று மாலை வண்ணர்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரைநிகழ்த்திய இலங்கையிலுள்ள இஸ்ரவேல் பிரதிநிதி டாக்டர் பன்னியார் கூறினர். திரு. எஸ். அம்பிகைபாகன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் பொன். விக்கினராசா பேச்சாளரை அறிமுகம் செய்துவைத்தார். இக்கூட்டத்திற்கு தமிழ்த்தலைவர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் வந்திருந்தனர்.

டாக்டர் பன்னியார் மேலும் பேசியதாவது:-

1948-ல் உருவாக்கப்பட்ட இஸ்ரவேலின் பொருளாதார நிலை கமத்தொழில், கைத்தொ

(8-ம் பக்கம் பார்க்க)

## ஈழநாடு

21-1-62 வாரப் பதிப்பில்

★ வேடிக்கை மனிதர்: இலக்கியக் கட்டுரை கனக. செந்திநாதன்

★ தத்துவத்தின் அடிப்படையிலே: சிறுகதை 'பரம்'

★ தேயிலைத்தோட்டத்திலே: கவிதை மு. க. சூரியன்

★ நாட்டில் வளர்ந்து வரும் தொழிற்சாலைகள்: 'ஆத்திரேயன்'

★ உலகமேடை ★ கலைஅரங்கம் இன்னும் பல.

விலை சதம் 15

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்க கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## கலை பயில் மன்றம்

**சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு**

கீழ்க்காணும் பரீட்சைகளுக்கு ஆயத்தஞ் செய்யும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு உதவும் பொருட்டுப் பின்வரும் வகுப்புகள் அனுபவமும் ஆற்றலும் மிக்க ஆசிரியர்களால் இங்கே நடாத்தப்படுகின்றன.

1. யா. ஆ. பா. சங்கப் பாலபண்டித வகுப்பு. வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பிற்பகல் நடத்தப்படும். 2. ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் பிற்பகல் நடத்தப்படும். 3. பொதுக் கல்வித் தராதர (கலைப்பகுதி) ஆகஸ்ட் மாதப் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்யும் வகுப்பு கிழமை நாட்கள் ஐந்திலும் மு. ப. 8-45 தொடங்கி பி. ப. 1 மணி வரையும் நடைபெறும். 4. பொதுக் கல்வித் தராதர விஞ்ஞானப் பிரிவில் 1962 டிசம்பரில் தோற்றும் மாணவருக்குரிய வகுப்பு கிழமை நாட்கள் ஐந்திலும் பிற்பகல் 5-30 தொடக்கம் 7-30 வரை நடைபெறும்.

மேற்படி வகுப்புகளிற் சேர விரும்புவோர் 1-2-62க்கு முன் சேர்ந்து கொள்க.

அதிபர்

---


நேயர்கள் கவனிக்கவும்

எனது கண் பரிசோதனை நிலையத்துக்குப் பக்கத்தில் முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில்

**பேர்னுண்டோ**

என்ற விலாசத்துடன் ஒரு நிலையம் ஆரம்பமாகியுள்ளது.

அது எனது நிலையமன்று.

**வி.ரி.பேர்னுண்டோ**

என்பதுவே எனது நிலையம்.

**பல் வைத்தியர்**
**கண் பரிசோதகர்**
11, பெரியதெரு, யாழ்ப்பாணம்.


---

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிலவ வருடம் தை மாதம் 8-ம் திகதி (ஆங்கிலம் 21 - 1 - 62) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-12 மணி தொடக்கம் 3-12 மணிக்குள் பிரதமதிதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் மிதுன லக்கினமும் கூடிய சுப முகூர்த்தத்தில், திரு சபாபதிப்பிள்ளை அவர்களின் குமாரன் திருநிறை செல்வன் பாலசிங்கத்திற்கும் திரு. பொன்னையா அவர்களின் குமாரத்தி திருநிறை செல்வி விமலாதேவிக்கும் திருமணஞ் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் விஜயஞ் செய்து மணமக்களை ஆசீர்வதித்து, நடைபெறும் விருந்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வண்ணம் தங்களன்புள்ள த. சபாபதிப்பிள்ளை, மு. பொன்னையா. அவ்வண்ணம் தங்கள் வரவை எதிர்பார்க்கும் ரி. எஸ். பரராஜசிங்கம், (மணமகனின் சகோதரன்) சங்கானைமேற்கு, பண்டத்தரிப்பு. பி. தேவதாசன் (மணமகளின் சகோதரன்) சங்குவேலி, மானிப்பாய்.

---

# காங்கிரசுக்கு அடுத்தது தி. மு. க.

## தலைவர்கள் தேர்தல் மனு தாக்கல்

சென்னை ராஜ்யத்தில் "தேர்தல் சூடு" பிடிக்க ஆரம்பித்துவிட்டது.

அரசியல் கட்சிகள் அனைத்தும் தங்களது பிரசார சாதனங்களை முடுக்கிவிட்டுவிட்டன. பொதுக் கூட்டங்கள், வீட்டுக்கு வீடு சென்று ஆதரவு தேடுதல், சுவரொட்டி பிரசாரம் ஆகியவை துவங்கி விட்டன.

அபேட்சை மனுக்களைத் தாக்கல் செய்ய ஜன. 20 கடைசி தேதியாக இருந்த போதிலும், தேர்தல் அதிகாரிகளிடம் கட்சி அபேட்சகர்களிடமிருந்து பெருமளவில் அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

அபேட்சை மனுக்களை தேர்தல் அதிகாரிகள் ஜன. 22ல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வர். அபேட்சை மனுக்களை வாபஸ்பெற கடைசித் தேதி ஜன. 25.

சென்னை ராஜ்யத்தில் 41 பார்லிமெண்டரி தொகுதிகளிலும், 206 அசெம்பிளிதொகுதிகளிலும் மொத்தம் 186,69,080 வோட்டர்கள் உள்ளனர். 1961-ம் வருடத்துக்கான ளும், லோக சபைக்கு 13 அபேட்சர்களும் நிறுத்தப்படுகின்றனர்.

பார்லிமெண்டரி, அசெம்பிளி தொகுதிகளில் எல்லா ஸ்தானங்களுக்கும் காங்கிரஸ் ஒன்றுதான் போட்டியிடுகிறது.

ஒரு சில ஸ்தானங்களைத் தவிர, அநேகமாக எல்லா ஸ்தானங்களுக்கும் அபேட்சகர்களின் பெயர்களை த. நா. கா. க. ஏற்கெனவே வெளியிட்டு விட்டது.

இதுவரை சுதந்திரக் கட்சி சுமார் 80 அசெம்பிளி, 12 பார்லிமெண்டரி தொகுதிகளுக்கு தனது அபேட்சகர் ஜாபிதாக்களை வெளியிட்டுள்ளது.

தி. மு. க. இதுவரை சுமார் 125 அசெம்பிளி, 8 பார்லிமெண்டரி தொகுதிகளுக்குத் தனது அபேட்சகர்களை அறிவித்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியும் அசெம்பிளி தொகுதிகளுக்கு 60 அபேட்சகர்களையும் பார்லிமெண்ட் தொகுதிக்கு 5 அபேட்சகர்களையும் அறிவித்திருக்கிறது.

தமிழ் தேசிய கட்சி 2 பார்லிமெண்டரி, 9 அசெம்பிளி

காஞ்சிபுரம் அசெம்பிளி தொகுதிக்கு தி. மு. க. தலைவர் ஸ்ரீ அண்ணாத்துரை தமது அபேட்சை மனுவை தாக்கல் செய்தார்.

### உதவி சபாநாயகர் பக்தவத்சல நாயுடு

அரக்கோணம் அசெம்பிளி தொகுதிக்கு உதவி சபாநாயகர் ஸ்ரீ பி. பக்தவத்சலம் நாயுடு (காங்), ஸ்ரீ ராமசாமி (தி. மு. க.), ஸ்ரீ தீனதயாள நாயுடு (சுயே) ஆகியோரும் ஷோலிகர் தொகுதிக்கு ஸ்ரீ எம். பொன்னுரங்க முதலியார் (காங்), ஸ்ரீ பெரியசாமி ரெட்டியார் (சுயே) ஆகியோரும் நியமன பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

### சம்பத்

தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் திரு. ஈ. வெ. கி. சம்பத் தென் சென்னை மக்கள் சபைத் தொகுதிக்கான மனுவைத் தாக்கல் செய்ததால இவரை எதிர்த்து சுயேச்சை அபேட்சகராக திரு. எப். கணபதி மனு தாக்கல் செய்துள்ளார்.

### கண்ணதாசன்

தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் திருவல்லிக்கேணியில் கண்ணதாசன் வண்ணாரப்பேட்டையில் குமாரசாமி, மைலாப்பூரில் மணிவண்ணன், எழும்பூரில் கோவிந்தசாமி ஆகியோர் போட்டி போடுவார்கள் என்றும் இவர்கள் 19 ந் தேதி மனு தாக்கல் செய்வார்கள் என்றும் கூறப்படுகிறது!

### மந்திரி கக்கன்

மராமத்திலாகா மந்திரி ஸ்ரீ பி. கக்கன் சமய நல்லூர் ரிசர்வ் தொகுதியிலிருந்து சென்னை அசெம்பிளிக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்தார். இதே தொகுதியிலிருந்து ஸ்ரீ ஜி. ஆர். முனியாண்டி கம்யூனிஸ்ட் அபேட்சகராக நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருக்கிறார்.

### டி. டி. கே. போட்டியிட வில்லை

யூனியன் சர்க்காரின் மாஜி நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி தற்பொழுது தென் சென்னை தொகுதிக்கு லோக சபை மெம்பராக இருக்கிறார். அவர் மீண்டும் போட்டியிட வில்லை என்று ஆதாரபூர்வமாக அறியப்படுகிறது.

### காங்கிரஸ் பெண்கள்

காங்கிரஸ் சார்பாக அசெம்பிளிக்கு 12 பெண்களும், லோக சபைக்கு ஒரு பெண்ணும் அபேட்சகர்களாக இருக்கின்றனர்.

### அமைச்சர் சுப்பிரமணியம்

சென்னை நிதி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம் இன்று கோவை ஜில்லா கலெக்டரிடம், பொள்ளாச்சி லோக சபைத் தொகுதிக்குத் தனது நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்தார்.

சென்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ சுப்ரமண்யம் கோவில்பாளையம் தொகுதியிலிருந்து ராஜ்ய அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொள்ளாச்சி லோக சபைத் தொகுதியிலிருந்து ஸ்ரீ பி. ஆர். ராமகிருஷ்ணன் சென்ற பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கோவை லோக சபைத் தொகுதிக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

இதே ஸ்தானத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில ஸ்ரீமதி பார்வதி கிருஷ்ணனும் இன்று நியமனப் பத்திரம் தாக்கல் செய்தார். சென்ற தேர்தலில் ஸ்ரீமதி பார்வதி கிருஷ்ணன் இதே தொகுதியிலிருந்துதான் லோக சபைக்கு தேர்தெடுக்கப்பட்டார்.

சுதந்திராக் கட்சி அபேட்சகரான ஸ்ரீ ஜி. கே. சுந்தரம், சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகர் ஸ்ரீ அருணசலம் ஆகியோரும் இதே தொகுதிக்கு இன்று நியமனப் பத்திரங்கள் கொடுத்தார்கள்.

கோபி லோக சபைத் தொகுதிக்கு ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் (எம். எல். ஏ.) ஈரோடு லோக சபைத் தொகுதிக்கு ஸ்ரீ கே. கே. பரமசிவன இருவரும் காங்கிரஸ் அபேட்சகர்களாக நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

### ஈரோடு

ஈரோடு லோக சபைத் தொகுதிக்கு ஸ்ரீ முத்துசாமிக் கவுண்டர் என்ற சுயேச்சை அபேட்சகரும் நியமனப் பத்திரம் கொடுத்தார்.

அன்று நாள் நன்றாயில்லை என்பதற்காக யாரும் நியமனப் பத்திரம் கொடுக்கவில்லை.

### டாக்டர் சுப்பராயன்

யூனியன் செய்திப் போக்குவரத்துமந்திரி டாக்டர் சுப்பராயன், யூனியன் உதவி ரயில்வே மந்திரி ஸ்ரீ. எஸ். வி. ராமசாமி ஆகிய இருவரும் முறையே திருச்செங்கோடு, சேலம், பார்லிமெண்டரி ஸ்தானங்களுக்கு இன்று தங்களது நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

(5ம் பக்கம் பார்க்க)

---

# தமிழகமும் பொதுத்தேர்தலும்

இறுதி வாக்காளர் ஜாபிதாவின்படி ராமநாதபுரம் பார்லிமெண்டரி தொகுதியில் தான் அதிகபட்ச வாக்காளர்கள் உள்ளனர்! அதாவது 5,17,216 வோட்டர்கள் உள்ளனர் அசெம்பிளி தொகுதிகளில் அதிகபட்ச வாக்காளர்கள் உள்ள தொகுதியாக ராயநகர் அசெம்பிளி தொகுதியாகும். இத் தொகுதியில் 1,28,714 வோட்டர்கள் உள்ளனர்.

கோவை பார்லிமெண்டரி தொகுதியிலும் 5 லட்சத்துக்கு மதிகமான வாக்காளர்கள் உள்ளனர். இதர பார்லிமெண்டரி தொகுதிகளில் வாக்காளர்கள் 5 லட்சத்துக்கும் குறைவு.

சென்னைவடக்கு பார்லிமெண்டரி தொகுதியில் வோட்டர்கள் எண்ணிக்கை 4,52,133. சென்னை தெற்கு பார்லிமெண்டரி தொகுதியில் 4,85,855.

ஜில்லா வாரியாகப் பாரக்குமிடத்து சேலம் முதல் ஸ்தானம் வகிக்கிறது. மொத்தம் 20,31,685 வாக்காளர்கள் இருக்கின்றனர். குறைந்தபட்ச வாக்காளர் நீலகிரி ஜில்லாவில் உள்ளனர். அதாவது 2,03,205 வோட்டர்கள் இருக்கின்றனர்.

### காங்கிரசுக்கு அடுத்து தி. மு. க.

காங்கிரஸுக்கு அடுத்தபடியாக அதிமான அபேட்சகர்களை நிறுத்தப் போவது தி. மு. க. கட்சியே. அசெம்பிளிக்கு 123. அபேட்சகர்களை ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களை தெரிவித்துள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட ரீதியில் மொத்த அபேட்சகர்களின் எண்ணிக்கை விவரம் ஜன. 20 க்கு பின்னரே தெரியும்.

### முதலமைச்சர் காமராசர்

சிவகாசி உதவிக் கலெக்டர் முன்னிலையில் சென்னை முதன் மந்திரி ஸ்ரீ. கே. காமராஜ் சாத்தூர் அசெம்பிளித் தொகுதிக்கு அபேட்சை மனு தாக்கல் செய்தார்.

இதே தொகுதிக்கு ஸ்ரீ. கே பழனிச்சாமி நாடாரும் (சுயே) அபேட்சைத் தாக்கல் செய்திருக்கிறார்.

### அண்ணாத்துரை

உத்திரமேரூர் அசெம்பிளி தொகுதிக்கு ஸ்ரீ சீனிவாச ரெட்டியார் (காங்) சுயேச்சைகளான ஸ்ரீ தீனதயாள நாயுடு, ஸ்ரீ கே. துரைசாமி நாயக்கர், ஸ்ரீ ஜகந்நாதன் ஆகியோர் அபேட்சை மனுக்களை தாக்கல் செய்தனர்.

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**வருடாந்தக் கொண்டாட்டம் 1962**

ஜனவரி 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தயவு செய்து செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். ஏ. சோமஸ்கந்தா, கௌரவ செயலாளர், மேர்க்கண்டைல் வங்கி, யாழ்ப்பாணம்.

---

## அறிவித்தல்

காடு வெட்டி எரித்தல், கட்டை பிடுங்குதல், சாறுதல், வரம்பு போடுதல் இன்னும் வயல் வேலைகள் திருப்திகரமான முறையில் செய்து கொடுப்போம். விபரங்கட்கு: எம். செங்கோல், c/o "வஸந்தாஸ்", கரடிப்போக்கு, கிளிநொச்சி.

---


# மோணரு அன் ரோஸ் பப்படங்கள்

**நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது**

மோணரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

MONARA PAPPADAM — TRADE MARK 1956
ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No 18255 — A. M. BUHARI, 255, 5th CROSS ST. COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்

**ஏ. எம். புகாரி அன் கோ.**

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# காஷ்மீர் விவகாரம்-பாதுகாப்புசபையை கூட்டும்யோசனை

## அமெரிக்கா ஆதரிக்கவில்லை?

நியுயோர்க், ஜன. 19
காஷ்மீர் பிரச்சினையை விவாதிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபை கூடவேண்டுமென்ற பாகிஸ்தானின் கோரிக்கையை அமெரிக்கா ஆதரிக்கவில்லையென்று ஐ. நா.விலுள்ள அமெரிக்க ராஜாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

காஷ்மீர் பிரச்சினை ஐ நா. வுக்கு வெளியில் இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகாண வேண்டிய ஒரு பிரச்சினையென்ற தனது கருத்தை அமெக்காமீண்டும் வலியுறுத்துவதாக தெரிகிறது.

காஷ்மீர்பற்றி விவாதிக்கப் பாதுகாப்புச் சபை கூடவேண்டுமென்ற பாகிஸ்தான் கோரிக்கைப்படி சபையின் கூட்டம் நடைபெறவேண்டிய அவசியமில்லையென்றும் இதற்கு உதாரணமாக சமீபத்தில் கடாங்கா பற்றி விவாதிக்க பாதுகாப்புச் சபை கூடவேண்டுமென்ற முன்னாள் பிரஞ்சு காங்கோவின் கோரிக்கை பெரும்பான்மையான அங்கத்தவர்களால் நிராகரிக்கப்பட்டதை அமெரிக்காராஜாங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றனவாம்.

காஷ்மீர் பிரச்சினைபற்றி விவாதிப்பதற்கு பாதுகாப்புச் சபை இம்மாதம் 22ந்திகதி கூடவேண்டுமென்ற பாகிஸ்தானின் கோரிக்கைபற்றி சபையின் தலைவரான பிரிட்டிஷ் பிரதிநிதி சேர்பட்ரிக்டீன் இன்னும் கொள்கை நிலையைத் தெளிவாக்கிக் கொள்ளவில்லையெனத்தெரிகிறது.

சபைவிதிகளின்படி பாகிஸதானின் கோரிக்கைக்கிணங்க சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ், பிரஞ்சு பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

பாகிஸ்தானின் கோரிக்கையைஆட்சேபித்து காஷ்மீர்விஷயமாக புதியநிகழ்ச்சியெதுவும் நடைபெறவில்லையென்றும்பாரதத்தில் தேர்தல் நடைபெறவிருக்கும் இந்தநேரத்தில் பாதுகாப்புச்சபை காஷ்மீர்பற்றி விவாதிப்பதற்கு சரியான சமயமல்லவென்றும் ஐ நா. வின் இந்திய பிரதிநிதிதிரு. ஜி.எஸ். ஜா.பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு கடிதம்எழுதியிருந்தது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

## 10-வது குண்டு பரீட்சை

கேப்கனவரால், ஜன. 19
அணு ஆயுதமொன்றை அமெரிக்கா நேற்று நெவாடாவில் நிலத்துக்கடியில் பரீட்சை செய்ததாக அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்தது. குறைந்த பட்சசக்தி வாய்ந்த இந்தக் குண்டு அமெரிக்காவின் தற்போதைய பரீட்சைத் தொடர்பில் பத்தாவதாகும்.

## மேற்குஇரியன்

### சிங்கப்பூர் சட்டசபையில் விவாதம்

கோலாலம்பூர், ஜன. 19
மேற்குஇரியானை விடுதலை செய்யவேண்டுமென்ற இந்தோனேஷியாவின் கோரிக்கைக்கு சிங்கப்பூர் மக்கள் ஆதரவளிக்கவேண்டுமென்ற ஒரு பிரேரணை இப்பொழுது சிங்கப்பூர் சட்டசபையில் விவாதிக்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூர் கலாசார மந்திரி திரு. ராஜரத்தினம் உட்பட மற்றும் பலர் ஆதரித்துள்ளனர்.

## சென்னை சாம்பியனது

கல்கத்தா, ஜன. 19
பல்கலைக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற அகில இந்திய டென்னிஸ் போட்டியில் சென்னை பல்கலைக்கழகக் கோஷ்டி இவ்வருட சாம்பியனாகத் தெரிவு செய்யப்பெற்றது. நேற்று இங்கு நடைபெற்ற இறுதிப்போட்டியில் அலகபாத் பல்கலைக்கழக கோஷ்டியை சென்னைக் கோஷ்டி தோற்கடித்தது.

# பாதுகாப்புக்கு அதிக தொகை

## அமெரிக்காவின் புதிய 'பட்ஜட்'

## 'ஜூன்மாதத்திற்குள் பேர்லின் பிரச்சினை தீர்ந்துவிடும்'

—திரு. கென்னடி

வாஷிங்டன், ஜன. 19
அமெரிக்காவின் சரித்திரத்திலேயே இதுவரையில்லாதவிதத்தில் சமாதான காலத்தில் பெருந்தொகை செலவிட அனுமதிகோரும் வரவு செலவுத் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் எப். கென்னடி நேற்று அமெரிக்க பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்.

9,250 கோடி டாலர் அடுத்த நிதிவருடத்தில்செலவிட இந்த வரவுசெலவுத் திட்டம் வசதியளிக்கிறது.

இத்தொகையில் பாதுகாப்புச் செலவுக்கு 5,270 கோடி டாலர் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை சென்ற வருடத்தில் பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட 150 கோடி டாலர் அதிகமாகும்.

வானவெளி ஆராய்ச்சிக்கும் அந்நியநாடுகளின் உதவிக்கும் அதிகபணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### அணுஆயுத யுத்தம் வராது

வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி கென்னடி உரை நிகழ்த்துகையில் "அணுஆயுத யுத்தம் ஏற்படக்கூடிய சாத்தியமில்லை" என்று நம்பிக்கை தெரிவித்தார். "என்றாலும் பெரியஅளவில் ராணுவ வலுத்தாக்குதல் ஏற்படக்கூடும். இதற்கு நாம் வலிமை வாய்ந்த பன்முகப் படைகளை தயாராக வைத்திருக்கவேண்டும். எத்தாக்குதலையும் எதிர்த்துசமாளிக்க நமதுபடைகளை நாம் தயார் செய்துகொள்ள வேண்டும்" என்று ஜனாதிபதி கென்னடி தெரிவித்தார்.

வானவெளி ஆராய்ச்சிபற்றி ஜனாதிபதி குறிப்பிடுகையில் அடுத்த பத்துவருடகாலத்திற்குள் சந்திர மண்டலத்திற்கு அமெரிக்கர் ஒருவர் செல்வது சாத்தியமாகுவேண்டுமென்றார்.

பேர்லி பிரச்சினைபற்றி திரு. கென்னடி குறிப்பிடுகையில் ஜூன்மாத இறுதிக்குள் பேர்லின் பிரச்சினைக்குத் தீர்வுகிடைத்துவிடுமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

லாவோஸ்

## முத்தரப்பு இளவரசர்கள் சந்திப்பு

ஜெனிவா, ஜன. 19
லாவோசின் முத்தரப்பு இளவரசர்களான சுவன்னபூமா, பூன்ஊம், சவன்னவாங் ஆகிய மூவரும் லாவோசுக்கான சர்வதேசக் கமிஷனின் கூட்டுத் தலைவர்களான திரு. புஷ்கினையும் திரு. மால்கம் மக்டனல்டையும் நேற்று ஒன்றாகச் சந்தித்தனர்.

பின்னர் மூன்று இளவரசர்களும் தமக்குள் ஆலோசனை நடத்தினர். என்றாலும் முறையாக மீண்டும் கூடிப் பேசுவதற்குத் திட்டமிட்டிருந்தும் அதன்படி சந்திப்பு நடைபெறவில்லை.

# மேற்கு இரியனுக்கு ஐ நா பார்வையாளர்கள்

## தலைமைக் காரியதரிசிக்கு டச்சு வேண்டுகோள்

ஆம்ஸ்டர்டாம், ஜன. 19
மேற்கு இரியன் பிரச்சினை சம்பந்தமாக ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யு தாண்ட் சமரசப் பேச்சு வார்த்தைக்கு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயார் என்றும் டச்சு அரசாங்கம் தலைமைக் காரியதரிசிக்குத் தெரிவித்துள்ளது.

இதே சமயம் மேற்கு இரியானுக்கு ஐ. நா. பார்வையாளர்களை அனுப்பவேண்டுமென்றும் டச்சு அரசாங்கம் தலைமைக் காரியதரிசியைக் கேட்டுள்ளது.

தலைமைக் காரியதரிசியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஐ. நா. விலுள்ள தனது பிரதிநிதிக்கு டச்சு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சென்ற திங்கட்கிழமை மேற்கு இரியன் கரையோரப் பகுதியில் நடைபெற்ற கப்பல் சண்டை பற்றி டச்சு அரசாங்கம் நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டது.

இந்தோனேஷிய மோட்டார் பீரங்கிப் படகுகள் மேற்கு இரியான்மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகவும் தற்காப்பின் நிமித்தமே டச்சு வீரர்கள் நடவடிக்கை எடுக்க நேரிட்டதென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

### சோவியத் தூதர் சந்திப்பு

இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ ஜாகர்த்தாவிலுள்ள சோவியத் தூதரை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

சென்ற திங்கட்கிழமை இந்தோனேஷியப் படகுகள் மீது டச்சுக்காரர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 30 இந்தோனேஷியர்கள் காணமல் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## நாகாலந்து அபிவிருத்தி

### 2 கோடி 30 லட்சம் செலவிடப்படும்

ஷில்லாங், ஜன. 19
நாகாலந்தின் நடப்புவருட அபிவிருத்திக்கு செலவிட உத்தேசித்துள்ள தொகை 2 கோடி 31 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அபிவிருத்திக்கு 76 லட்சம் ரூபாயும் கல்வி, சுகாதாரம், விஞ்ஞானம் ஆகியவைகளுக்கு 65 லட்சம் ரூபாயும் செலவிட ஒதுக்கப்படடுள்ளது. இந்த விபரத்தை நாகாலந்தின் இடைக்காலசபைக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. ஷிலுஆவோ தெரிவித்தார்.

# சீலவற்றில் மேலதீகம்; பலதில் பற்றுக்குறை

## ஆசிரியர் தொகை நிலையை இடமாற்றமூலம்சமப்படுத்தநடவடிக்கை

கொழும்பு, வெள்ளி
சில பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக இருக்கின்றனர். ஆனல் பல பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தக் கஷ்டத்தை ஓரளவுக்கு நிவர்த்தி செய்யும் முயற்சியைக் கல்வி இலாகா விரைவில் மேற்கொள்ளவிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் மிகுதியாக உள்ள ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்வதென வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி' சில்வா தீர்மானித்துள்ளார்.

பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர் தொகை நிலைமைகளை அறிவித்து செய்யக்கூடிய மாற்றங்கள்பற்றித் தமக்கு ஒரு விபரப் பட்டியலை அனுப்பிவைக்குமாறு மாவட்ட வித்தியாதரிசிகளை வித்தியாதிபதி கேட்டுள்ளார்.

கடைசியாகச் சேர்ந்தவர்களையும் தராதரங் குறைந்த ஆசிரியர்களையுமே இடமாற்றஞ் செய்ய வேண்டும் என வித்தியாதிபதி மாவட்ட வித்தியாதரிசிகளுக்குக் கூறியுள்ளார். புதிய இடமாற்றத் திட்டத்தின்கீழ் ஜனவரிக்குப் பின்னர் இடமாற்றம் பெற்றுள்ளவர்களைத் தவிர்த்து மாற்றங்களைக் கவனிக்கும்படி வித்தியாதிபதி கேட்டுள்ளார். மார்ச் முற்பகுதியளவில் நிலைமைகள் சரிப்படலாம் என வித்தியாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# 'பேர்லின் ஆபத்து இன்னும் நீங்கவில்லை'

## அமெரிக்க ராஜாங்கமந்திரிகருத்து

நியுயோர்க், ஜன. 19
"பேர்லின் நிலைமை இன்னும் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளது" என்று அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்ரஸ்க் தெரிவித்தார்.

பேர்லின் எல்லைப் பகுதியிலிருந்து ரஷ்ய, அமெரிக்கா டாங்கிகள் வாபஸ் பெறப்பட்டது குறித்து திரு. ரஸ்க் கருத்துத் தெரிவிக்கையில் டாங்கிகள் வாபஸ் பெறப்பட்டுவிட்டதால் நெருக்கடி நீங்கிவிட்டதென்று கொள்ள முடியாது என்றார்.

பேர்லின் விஷயமாக ரஷ்யா தனது போக்கில் இன்னும் மாறுதல் ஏற்படுத்திக் கொள்ளவில்லையென்றும் சமீபத்தில் மாஸ்கோவில் ரஷ்ய வெளிவிவகார மந்திரியுடன் அமெரிக்கத் தூதர் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இது தெரிய வந்ததென்றும் திரு. ரஸக் கூறினர்.

பேர்லின் சம்பந்தமாக சமீபத்தில் அமெரிக்காவுக்கு ரஷ்யா அனுப்பிய குறிப்பிலிருந்தும் ரஷ்யாவின் விட்டுக்கொடுக்காத மனப்பான்மை தெரிந்ததென்றும் திரு. ரஸ்க் கூறினர்.

## மைசூர் வாக்காளர்

பங்களூர், ஜன. 19
மைசூர் ராஜ்யத்தில் வாக்காளர்களின் தொகை பதின்மூன்றரைச்சதவிகிதம் அதிகரித்துள்ளது. அடுத்துவரும் பொதுத் தேர்தலில் மைசூர் ராஜ்யத்தில் ஒருகோடி 13 லட்சத்து 51ஆயிரத்து 559 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

## குருநாகல் நகரசபையில் 'சிங்களம் மட்டும்'

### மாதாந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

குருநாகல், வெள்ளி
"குருநாகல் நகரசபையே முதன்முதலில் சிங்கள மொழியில் கருமங்களை நடாத்தத் தொடங்கிய ஸ்தலஸ்தாபன சபையாகும். முதன் முதலாக இங்குதான் சிங்களமொழியில் அரசகருமங்கள் நடாத்த ஆரம்பித்திருந்தபோதும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமான முறையில் கருமங்கள் நடத்தினர்."

இவ்வாறு குருநாகல் நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசும்போது திரு. ஜி. டபிள்யு. பஸ்தியன் கூறினர்.

குருநாகல் நகரசபையிலிருந்த பல சேவையாளர்களை ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷன் இடமாற்றஞ்செய்துள்ளதாகவும் அவர்களில் பலர் உயர்தர பரீட்சையின் பின்னர் சிங்களமொழியில் திறமையாக வேலையாற்றக் கூடியவர்களெனவும் திரு. பஸ்தியன் கூறினர். இடமாற்றஞ் செய்யப்பட்டவர்களின் ஸ்தானங்களுக்குச் சிங்களமொழியில் தேர்ச்சியுடையவர்களையே அனுப்பி வைக்கும்படியும் திரு. பஸ்தியன் மேயரைக் கேட்டுக்கொண்டார்.

நகரசபையில் சேவையாற்றிவரும் சேவையாளர்கள் எவரும் சிங்கள தகுதிப் பரீட்சையில் தேறவில்லை எனவும் சிங்கள மொழியை நன்கு தெரிந்தவர்களையே நியமிக்கும்படி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனைத் தாம் கேட்டுள்ளதாயும் மேயர் கூறினர்.

நகரசபையின் 'சிங்களம் மட்டும்' கொள்கைக்கு விரோதமானவர்கள் இருந்து கருமத்தைத் தடைப்படுத்துவதென எழுந்தகுற்றச்சாட்டொன்றைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் மேயர் கூறினர்

### மணி வாக்கு

'எவன் தங்கவனை இருக்க விரும்புகின்றனோ அவன் ஊழியனுட இருசக வேண்டும்.'

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 7 உ (20 - 1 - 62)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

## யுத்தமா? சமாதானமா?

நியுகினி தீவில் மேற்கு இரியன் எனும் பகுதி இந்தோனேஷியாவுடன் இணைக்கப்பட வேண்டுமென இந்தோனேஷியா வற்புறுத்தி வந்தது. அத்துடன் டச்சுக்காரர்கள் வெளியேற வேண்டுமெனவும் அது எடுத்துக் காட்டியது. இது சம்பந்தமாகச் சமரசத்துக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென்பதை டச்சுக்காரர்களும் இந்தோனேஷியாவும் விரும்பிக் கொண்டிருந்த வேளையில் மேற்கு நியூகினியின் தென் கரையில் டச்சுப் போர்க்கப்பல்கள் இந்தோனேஷிய பீரங்கிப் படகு ஒன்றை மூழ்கடித்து நிலைமையை மகாமோசமாக்கியிருக்கின்றது.

மேற்கு இரியன் தகராறில் சமரசத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளரும் அமெரிக்காவும் முயற்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில் இத்தகைய திடீர்த் தாக்குதல்கள் நிலைமையை மேலும் பழுதடையச் செய்து குரோதத்தை வளர்க்கவே உதவி செய்திருக்கின்றன.

மேற்கு இரியனை எவ்விதத்திலும் இந்தோனேஷியாவுடன் இணைத்துக் கொள்ளவேண்டுமென சுகர்னே ஏற்னெவே திட்டமிட்டிருந்தார். அங்குள்ள மக்கள் இந்தோனேஷியர்களை விட பலவகையிலும் வித்தியாசமானவர்கள் என டச்சுக்காரர்களென நீண்ட காலமாகக்கூறி வருகின்றனர். மேற்கு இரியனிலிருந்து டச்சுக்காரர்கள் வெளியேற வேண்டியதே முறை.

தாக்குதலுக்குப் பின்னர் டச்சு கடற்படை மேற்கு நியுகினிக் கரைகளில் பெருமளவில் ஒத்திகை நடத்தி வருவதாயும் விமானப் படைகளின் பலம் அதிகரிக்கப்பட்டு வருவதாயும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஹாலந்திலிருந்தும் கடற்படைகளின் உதவி கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேஷியாவுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு டச்சுக் கப்பல்களை சூயஸ் கால்வாய் மூலம் அனுமதிக்கப் போவதில்லை என எகிப்து தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது. எனினும் ஜனதிபதி நாஸர் இந்த நடவடிக்கையைக் கையாளத் தயங்கமாட்டார். டச்சுக் கப்பல்கள் பொதுவாக சூயஸ் கால்வாயை உபயோகிப்பது குறைவு எனக் கூறப்படுகிறது. மேற்கு நியுகினியில் டச்சுக்காரர்கள் ஏற்கெனவே தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சூயஸ் வழியாக அவசரமாக அவர்களுக்கு ஆயுத உதவி தேவைப்படவில்லை யென்றும் சம்பவங்களின் போக்கிலிருந்து அறிய முடிகின்றது. யுத்தமா சமாதானமா என்பது இந்தோனேஷியாவின் தீர்மானத்திலேயே தங்கியிருக்கின்றது.

# 'தமிழ்பேசும் மக்கள் திருப்திகொண்டுள்ளனர்'

## டில்லியில் கல்வி மந்திரி தகவல்

புதுடில்லி, ஜன. 19

'காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொடுத்த வாக்குறுதியின்படி நியாயமான அளவு தமிழ் உபயோகம் இலங்கையில் அமுலாக்கப்பட்டுள்ளது. கல்வித்துறை சம்பந்தமாகவும் வேலை வாய்ப்புக்கள் சம்பந்தமாகவும் தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுவருகின்றன' என்று இலங்கை கல்விமந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் இங்கு நிருபர்கள் மகாநாடொன்றில் தெரிவித்தார்.

"அரசியல் வாதிகளைத் தவிர ஏனைய தமிழ் பேசும் பொது மக்கள் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள்பற்றித் திருப்தி கொண்டுள்ளனர்" என்று கல்விமந்திரி நிருபர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"பொதுக் கல்வி பெறுவதற்காக எமது நாட்டு மாணவர்கள் வெளிநாடு செல்வதை எமது அரசாங்கம் விரும்புவதில்லை. தற்பொழுது இவ்வித கல்வி ற்பதற்காக ஆயிரம் மாணவ மாணவிகள் இங்கு வந்துள்ளனர் தொழில்நுட்பக் கல்வி பெறுவதற்காகவும் உயர்ந்த கல்வித் தராதரம் பெறுவதற்காகவுமே எமது மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

எமது நாட்டில் பொதுக்கல்வியின் தரம் உயர்வாக இருக்கிறது. 5-12வயதுச் கிடையிலான 97 சத வீதமான மாணவர்கள் இலங்கையில் பாடசாலை செல்கிறார்கள். இந்த விதத்தில் எமது நாட்டை ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்தநாடாகக் கூறலாம். ஜப்பானில் இந்த வயதுடைய பிள்ளைகள் எல்லோரும் பாடசாலைக்குச் செல்கின்றார்கள். கல்வி கற்றவர்களின் தொகை இலங்கையில் அதிகம்.

சிங்களம்தான் அரசகரும மொழி போதனமொழியும் அதுவே. தமிழ்ப் பகுதிகளில் தமிழைப் போதன மொழியாகக் கொண்ட பாடசாலைகள் இருக்கின்றன.

## குருத்துவ தங்க விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் தோலகட்டியில் ஆச்சிரமத்தை ஆரம்பித்து வைத்தவரும் பாண்டியன் தாழ்வில் பிறந்தவருமான வண. அடிகள் பி. ஏ. தோமஸ் (ஓ. எம். ஐ) குருத்துவதங்க விழா பாண்டியன்தாழ்வு மக்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

மேள வாத்தியங்கள் முழங்க அடிகள் பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் கோவிலுக்கு அழைத்துவரப்பட்டார். 'தெதேயம்' நன்றி செலுத்தும் கீதத்துடன் விழா ஆரம்பமாகியது. வணக்கத்துக்குரிய, அடிகள் பி. தி யோகுப்பிள்ளை குருத்துவத்தின் மகத்துவம் பற்றிப் பேசினர்.

திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை யுபிலிச் சோபனங்கள் கூறும் வாழ்த்துப்படித்தார். ஆசிரியர் திரு. எஸ். சின்னப்பு நாயகம் ஞானப்பூச் செண்டு அன்பளிப்பாகக் கொடுத்தார். யேசுநாதரின் திருஇருதயத்திலும் மரியாயின் இருதயத்திலும் முழு நம்பிக்கைவைத்து வாழும்படி வண அடிகள் பி. ஏ. தோமஸ் மக்களுக்குப் புத்தி கூறினர்.

தோலகட்டி ஆச்சிரமம் அடிகள் தோமஸின் புனித இதயத்தை நன்கு எடுத்துக்காட்டுவதாகும். உலக வாழ்க்கையைத் துறந்து கடவுளையடையும் குறிக்கோளை மேற்கொண்டவர்களுக்கு வசதி வழங்கும் நோக்கத்துடனேயே தோலகட்டி ஆச்சிரமத்தை 33 ஆண்டுகளுக்கு முன்னர் அடிகள் ஆரம்பித்துவைத்தார்.

## பண்டிட் விஜயலக்ஷ்மி விஜயம்

கொழும்பு, வெள்ளி

பாரதப் பிரதமரின் தங்கையான விஜயலக்ஷ்மி பண்டிட் அடுத்த மாதம் 16-ம் திகதியளவில் இங்கு விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை பல்கலைக் கழக மாதர் சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே அவர் இங்கு வருகிறார்.

# தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் 4000 படுக்கைகள்

கொழும்பு, வெள்ளி

சுகாதார சேவைப் பகுதி எடுத்துள்ள புள்ளி விவரம் ஒன்றிலிருந்து, தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் 4,586 நோயாளிகளுக்குப் படுக்கைகள் உள்ளன என அறியக்கிடக்கிறது.

ஆஸ்பத்திரிகளில் இடநெருக்கடி அதிகம் ஏற்படுவதையிட்டுச் சுகாதார இலாகா ஆஸ்பத்திரிகளிலுள்ள படுக்கைகளின் தொகையை எண்ணிக் கையிட்டுப் பார்த்தது. சுகாதாரப் பகுதியின் ஆராய்ச்சியின்படி தோட்டப்பகுதி ஆஸ்பத்திரிகளில் மட்டும் 2742 படுக்கைளும் தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் 1,010 படுக்கைகளும் இருப்பதாகத் தெரிகிறது. கூட்டுறவு முறையான ஆஸ்பத்திரிகளில் 284 படுக்கைகளும் ஸ்தலஸ்தாபன சேவை ஆஸ்பத்திரிகளில் 50 படுக்கைகளும் இருக்கின்றனவாம்.

1959-ல் எடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின்படி தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் 3,352 படுக்கைகள் இருந்தன.

தோட்டப்பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளிலேயே புதிதாகப் படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

இரத்தினக் கம்பளம்

# தமிழ் நாட்டுக் காட்சி

பதுமன்

மாடு கட்டி மாளாதென யானை கட்டிப் போரடித்த தமிழ்நாட்டின் வளத்தை எடுத்துக் காட்டும் வகையில் சென்னையில் நடைபெறும் அகில இந்திய விவசாயப் பொருட்காட்சி அமைந்திருக்கின்றதென சென்னையிலிருந்து — மன்னிக்கவும் தமிழ் நாட்டிலிருந்து அன்பர் ஒருவர் கடிதம் எழுதியிருக்கின்றார். இனி கடிதத்தைப் படியுங்கள்.

ஒவ்வொரு மாநில ஆட்சியினரும் தனித்தனி மண்டபங்களை இப்பொருட்காட்சியில் நிர்மாணித்திருக்கின்றனர். அந்தந்தப் பிராந்தியங்களில் நடைபெறும் விவசாய முறைபற்றிய விவரங்கள் அம்மண்டபங்களில் இடம்பெற்றுள்ளன.

### ஆள் உயரத்தில்...

விவசாயிகள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு உழைக்கும் பல்வேறு கட்டங்களை ஆள் உயரச்சிலைகள் எடுத்துரைக்கின்றன.

அமெரிக்காவும் மேற்கு ஜெர்மனியும் தமது நாடுகளில் விவசாய முறைகளை விளக்கிக் காட்டுகின்றன. மேற்கு ஜெர்மன் அரசாங்கம் உயிருள்ள பசுக்களையே கொண்டு வந்துவிட்டார்கள். அந்த நாட்டுக் காளைக்கும் இந்தியப் பசுவுக்கும் பிறந்த கன்றுக்கு 'லட்சுமி' எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

### வீராங்கனைக்குச் சிலை

நெற் போர்கள்மீது யானைகள் மிதித்துவரும் காட்சி தமிழ்நாட்டு முகப்பை அலங்கரிக்கின்றது. அத்துடன் கடும் புலி ஒன்றை முறத்தைக் கொண்டு விரட்டியடிக்கும் தமிழ்ப் பெண்ணின் வீரத்தைச் சித்தரிக்கும் சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

குழந்தைகள் பூங்கா அழகாக அமைந்திருக்கின்றது.

•

### தேசிய பஸ்!

இலங்கைப் போக்குவரத்துச்சபை வரிப்பணத்தை விழுங்கிவரும் விபரத்தைப் படிக்கும்போது ஒரே பயமாக இருக்கின்றது. பஸ் போக்குவரத்து தேசியமயமாக்கப்பெற்ற மூன்று வருடங்களுக்கிடையில், 2 கோடி 60 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. 1960-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயை இ. போ. ச. விழுங்கியிருக்கின்றது. பஸ்சேவை தேசியமயமாக்கப்பட முன்னர் பஸ் முதலாளிகள் கனைகளையாகப் பணத்தை வாரி அள்ளினர். இன்று ஊழியர்களின் சம்பள வகையிலேயே லட்சக்கணக்கில் பணம் செலவாகின்றது. இவற்றுக்கெல்லாம் என்ன பரிகாரத்தை இ. போ. ச. விசாரணைக் கமிஷன் கூறவிருக்கின்றதோ தெரியவில்லை.

•

### மிக நல்ல காரியம்

சுழிபுரத்திலுள்ள மிருகபலி நிறுத்துச்சபை நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடித்திருக்கின்றது. அங்குள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பலகாலமாக நடைபெற்றுவந்த மிருக பலியை இவ்வாண்டு தொடக்கம் நடைபெறுதிருக்கச் செய்திருக்கின்றது. இதற்காகச் சங்கங்கள் பல தொண்டாற்றியிருக்கின்றன. அருள் வெள்ளம் பெருகும் ஆலயங்களில் இரத்த வெள்ளம் பெருகுவதைக் கருணை உள்ளம் படைத்த எவரும் விரும்ப மாட்டார்கள். கோவில் தர்மகர்த்தாக்களையும் சுழிபுரத்துச் சபையையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

## கலைஞன் குறிக்கோள்

வார்த்தை குழப்பம் மிகுந்த உலகில் அறிவாளி, அதிலும் குறிப்பாக எழுத்தாளன் அல்லது சொல்லோவியன் எப்போதும் தெளிவாக உரைத்தலில் கவனம் செலுத்தவேண்டும்.

வலதுசாரி, இடதுசாரி, பிற்போக்குவாதம், காலனி ஆதிக்கம், படைபலக் குறைப்பு, சமாதானம் என்ற வார்த்தைகளையெல்லாம் அவற்றின் உள்ளர்த்தம் புரியாமலே எல்லோரும் உபயோகித்துப் பேசுகிறார்கள். அடிப்படை அம்சங்கள் சம்பந்தமாக நாடுகளிடையில் வேற்றுமை இருக்கும் வரையில், படைபலக் குறைப்பு ஏற்பட முடியாது. அரசாங்கத்தின் வளைக்கமுடியாத சங்கற்பத்தின் கீழ் உணர்ச்சி குன்றிய மக்கள் இருக்கும்வரையில் சமாதானமும் அதே போன்று சாத்தியமில்லை. மக்களுக்கு சுதந்திரமளித்து ஒருவருக்கொருவர் கலந்து பழகுவதற்கு இடந்தந்தால் மட்டுமே, நிரந்தர சமாதானம் வேரூன்ற முடியும்.

## எது உண்மைக் கலை?

கலைக்காகவே கலையைப் போற்ற வேண்டுமென்பது சரியல்ல. அது எவ்வித லட்சியத்தையும் நிறைவேற்றவில்லை. உணர்ச்சிகள் கலைஞன் உள்ளத்தில் மீண்டும் உதயமாகி, அங்கேயே மடிகின்றன. ஜடப் பொருளையெல்லாம் முழு அளவுக்கு அடக்கி ஆண்டு, தன்னுடைய உணர்ச்சியிலிருந்து ஒன்றைப் படைப்பது தான் கலையாகும். தன்னுடைய கைப்படும் ஜடப் பொருளிடம் அறிவாளி கழிவிரக்கம் காட்டவேண்டும். இல்லையெனில், அவனது படைப்பில் ஆழ்ந்த கருத்தும் கருணையுமிராது. அது மட்டுமல்ல சிந்தனைச் சுதந்தரத்தை அதில் விளக்கவேண்டும். மேற்கத்தியநாடுகளிலுள்ள அறிவாளிகள், முக்கியமாக சோவியத் யூனியனிலுள்ள அறிவாளிகள் அரசாங்க ஜகத்குருக்களிடமிருந்து வருவதையெல்லாம் வேதவாக்காகக் கொள்கிறார்கள். இது மிகவும் அபாயகரமானது.

## இணையற்ற நிலையே குறிக்கோள்

சமுதாயத்தில் அறிஞருக்கு லட்சியத்தை நாடுவதற்குரிய யாதார்த்தமான தரம் ஏதாவது இருக்கவேண்டும். அதற்கு அரசியல் குறிக்கோளைவிட சிறிது அதிகமான லட்சியம் இருக்கவேண்டும். மத தத்துவங்கள் அத்தகைய தரத்தை வழங்குவதில்லை. அனுஷ்டானத்தில் மதங்கள் ஒன்றோடொன்று மோதுகின்றன. அவற்றிடையில் சமரஸமான சித்தாந்தம் காண முயன்றதெல்லாம் வீணாயின. விஞ்ஞானம் யதார்த்த குறிக்கோளை வழங்குகிறது. இணையற்றநிலை நோக்கி முன்னேறும் குறிக்கோள் கொண்ட பரிணாம தத்துவம் பலவகை லட்சியங்களிடையில் ஆதாரமானதைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைக் கலைஞனுக்குத் தருகிறது. எல்லாவற்றையும் ஒரே சீராக அமைக்கும் எண்ணத்தைக் கைவிட வேண்டும். அதே போல, குறுகிய தேசியவாதத்தையும் கைவிட வேண்டும். இணையற்ற நிலையை எட்டுவதற்கே கலைஞன் முயலவேண்டும். அந்த லட்சியத்திலிருந்து நழுவக்கூடாது.

(ஸ்பானிய எழுத்தாளர் டாக்டர் ஸால்வடா டி. மதாரிகா சென்னையில் இந்திய கலாச்சார தந்திராகமிட்டி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் நிகழ்த்திய உரையின் சுருக்கம்)

# பாலும் தேனும் பாயும் நாட்டில் கடமைசெய்ய பட்டதாரிகள் பின்வாங்குகிருர்களாம்

## டாக்டர் குருகே சொல்லுகிருர்

தங்காலை, வெள்ளி

"அம்பாந்தோட்டைப் பகுதியில் நாட்டரிசியும் பாலும் தேனும் நிறைந்து காணப்பட்டாலும் அங்குள்ள பள்ளிக்கூடங்களில் கடமையாற்றுவதற்குப் பட்டதாரிகள் பின்வாங்குகிருர்கள்"

கல்வி அமைச்சின் உயர்தர உதவிக் காரியதரிசி டாக்டர் ஆனந்தகுருகே தங்காலைப் பெற்றேர்கள் தூதுகோஷ்டி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர். தங்காலைப் பகுதியிலுள்ள பள்ளிக்கூட புனரமைப்புபற்றி டாக்டர் குருகேயிடம் தங்காலைப் பெற்றேர்கள் பிரஸ்தாபித்திருந்தார்கள். பள்ளிக்கூட புனரமைப்பு வேலைபற்றி டாக்டர் குருகே பெலியட்ட எம். பி. திரு. டி. ஏ. ராஜபக்ஸ தங்காலைக் கல்வி அதிபர் திரு. எல். பி. குணசேகரா வித்தியாதரிசி திரு. எல். டி. பி. ஜயசிங்கா ஆகியோர் கலந்தாலோசனை செய்தனர். பெற்றேர்கள் தூதுகோஷ்டிக்கு டாக்டர் குருகே கூறியதாவது:

எத்தனையோ பள்ளிக்கூடங்களின் பிள்ளைகளின் தொகை மிகக் குறைவாக இருப்பதனுல் கல்வித்தரம் அங்கெல்லாம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இப்பள்ளிக்கூட பிள்ளைகள் 12 அல்லது 13 தடவைகள் தோன்றியும் ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைவதில்லை. மகாவித்தியாலயம் ஒன்று நிறுவப்பட்டால் சிறிய பள்ளிக்கூடங்களுக்குச் சென்றுவந்த அப்பிள்ளைகள் ஜி. சி. ஈ. பரீட்சையில் இலகுவாகச் சித்தியடைந்து உயர்தர கல்வியையும் கஷ்டமின்றி நாடலாம். ஆண்களுக்கும் பெண்களுக்குமென குருமகாவித்தியாலயங்கள் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்ட போதும் இவற்றை இணைக்கப்பட வேண்டி நேரிடும். இல்லாவிட்டால் விஞ்ஞான கூடங்களிலும் ஏனைய வகைகளிலும் அதிகமான பணம் செலவாகும். இணைக்கப்படவிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு வெகுவிரைவில் ஒரு விஞ்ஞானகூடம் நிறுவப்படும்.

## தமிழ்க் காங்கிரஸ் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ கட்சியின் நிர்வாக சபைக் கூட்டம் இம்மாதம் 20, 21 ம்திகதிகளில் ஆனைப்பந்தி உயர்கலைமன்ற மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முதல்நாள் கூட்டத்தில் மத்திய கமிட்டிக்கு அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுவர். மறுமறுநாள் பிரேரணைகள் நிறைவேற்றப்படும் என்று நிகழ்ச்சிநிரலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சாவகச்சேரியில் சைவர்கள் உண்ணாவிரதம்?

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரிஇறைச்சிக்கடையில் மாட்டிறைச்சி விற்பனை செய்ய டெண்டர்ப்பத்திரங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றன.

இதைத்தடைசெய்ய உண்ணாவிரதமிருக்கவும் சத்தியாக்கிரகஞ்செய்யவும் பல சைவப்பெரியார்கள் முற்படுகின்றனர்.

வரியிறுப்போர் சங்கமும் இதை எதிர்த்தும் கூட்டங்கள் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்து வருகின்றதாகத் தெரிகிறது.

---

## ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவர்

ஊர்காவற்றுறை, வெள்ளி

அண்மையில்நடைபெற்ற ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் தேர்தலின்போது எதிர்பாராதவிதமாக திரு. பி.இம்மானுவல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பட்டினசபையின் சிரேஷ்ட அங்கத்தவரான திரு. இம்மானுவல் ஊர்காவற்றுறை சனசமூகநிலையத்தின் தலைவருமாவார். கடந்த மூன்று தேர்தல்களின்போதும் இவர் போட்டியின்றி அங்கத்தவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆயுர்வேத வைத்தியம்

# சமத்துவமளிக்க கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

மேற்கத்திய வைத்தியத்துடன் ஆயுர்வேத வைத்தியமும் சமமாக வைக்கப்பட வேண்டுமென்று சுகாதார மந்திரி திரு ஏ. பி. ஜெயசூரியாவைச் சந்தித்த சுதேச வைத்திய சபைத் தூதுகோஷ்டியொன்று கேட்டுக்கொண்டது.

மேற்கத்திய வைத்தியத்தை நாடுபவர்களுக்கு எவ்வளவு வசதி செய்து கொடுக்கப்படுமோ அந்த அளவு வசதி ஆயுர்வேத வைத்தியத்தை நாடுபவர்களுக்கும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் மேற்கத்திய வைத்திய சேவையும் ஆயுர்வேத வைத்திய சேவையும் நோயாளிகளுக்கு இலவசமாகக் கிடைக்க வசதி செய்யவேண்டுமென்றும் தூதுகோஷ்டி மந்திரியைக் கேட்டுக்கொண்டது.

ஆயுர்வேத வைத்தியத்துறையின் வளர்ச்சி பற்றியும் கடந்த காலத்தில் அது அரசாங்கத்திடமிருந்து பெற்ற மிகக் குறைந்த ஆதரவு பற்றியும் விளக்கிக் கூறும் மகஜர் ஒன்றையும் தூதுகோஷ்டி மந்திரியிடம் சமர்ப்பித்தது.

## வரப்பெற்ரேம்

**அட்டக் கிரக கூடமும் அடியார்கடமையும்:** வெளியீடு: நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கச் சமயப் பிரசாரசபை.

மகரராசியில் கூடும் எட்டுக் கிரகங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஏற்படும் பிடைகளை நிவிர்த்திசெய்து பிரார்த்தனைகளும்சாந்திகளும்நடைபெறுகின்றன. ஞானசம்மந்தப்பெருமான் மதுரைக்கு எழுந்தருளிய போது நாளும் கோளும் சரியாயில்லை என்று நாவுக்கரசர் கூறியபோது நம்பன் அடியார் மூன் நாளும் கோளும் நல்லவையே என்று கூறினர். அப்பதிகங்களே கோளறு பதிகம் எனப்படும். ஆலயங்களிலும், இல்லங்களிலும் தனிமையிலும் பாராயணம் செய்வதற்கு உகந்த முறையில் இது வெளியிடப் பெற்றுள்ளது. இந்த அழகிய வெளியீடு இலவசமாக வழங்கப் படுகின்றது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தினதும் பொதுஜன சேவைச்சங்க சமய பிரசாரசபையினரதும் பணியைப் பாராட்டுகின்ரேம்.

## சரவணையில் விளையாட்டுமைதானம் திறப்பு விழா

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை கடற்கரையோரமாக, சரவணை சேவாமன்றத்தினரால் அமைக்கப்பட்ட "நாவலர்" விளையாட்டு மைதானத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவிற்குதிரு. ரி. பத்மநாதன் தலைமை வகித்தார். மன்றத் தலைவர் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

மாணவ, மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றபின் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி. ரி. பத்மநாதன் பரிசுகள் வழங்கினர். கமக்காரர்களுக்கான விளையாட்டும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

மன்றக்காரியதரிசி திரு. ஏ. சண்முகரத்தினம் நன்றி கூறினர்.

---

## வைத்திய நிபுணர்கள் சங்கம் தொழிற் சங்கமாகவும் பதிவு?

கொழும்பு, வெள்ளி

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க வைத்திய நிபுணர்கள் சங்கம் தன்னை ஒரு தொழிற் சங்கமாகப் பதிவு செய்துகொள்ள முனைந்துள்ளது. இதுபற்றிய ஆரம்ப பேச்சுவார்த்தைகளை அரசாங்க வைத்திய நிபுணர்கள் சங்கம் ஏற்கெனவே தொழிற்சங்க பதிவு அதிகாரியுடன் நடாத்தியுள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள வைத்திய நிபுணர்கள் தனிப்பட்ட முறையிலும் வைத்தியம் செய்வதற்கான உரிமைபெறவகை செய்வதே இச்சங்கத்தின் பிரதான குறிக்கோளாகையாலேயே மேற்படி நடவடிக்கைகளை சங்கம் மேற்கொண்டுள்ளது.

சுகாதார சேவைப்பகுதியிலுள்ள வைத்திய நிபுணர்கள் அனைவரும் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டார்கள் எனத் தெரிகிறது.

---

## விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க வேண்டும்

### எம். பி. கருத்து

டெடிகம, வெள்ளி

'இந்த நாட்டிலுள்ள தவருன கல்வித்திட்டத்தினுல் எதிர்காலத்தில் கிராமங்களில் விவசாயம் செய்வதற்கு ஒரு இளைஞனும் அங்கு இருக்கமாட்டான்! என டிவுலபிட்டியா எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி மனிங்கமுவா பாடசாலையில் புதிதாக நிறுவப்பட்ட கட்டடமொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

'இவ்வித நிலையால் விவசாயம் குன்ருமலிருக்க அரசாங்கம் விவசாயிகளுக்கு விவசாயத்துறையில் தக்க பயிற்சி அளிக்க வேண்டும்', என திரு ஜெயக்கொடி மேலும் பேசுகையில் கூறினர்.

---

## பெண்கள் ஹாக்கிகோஷ்டி

புதுடில்லி, ஜன. 19

இந்திய பெண்கள் ஹாக்கி கோஷ்டி இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக இன்று புறப்பட்டது. இலங்கை செல்லும் வழியில் சென்னைக்குச் சென்றுள்ள இக்கோஷ்டி சனிக்கிழமை சென்னையிலிருந்து கொழும்புக்கு விமானத்தில் செல்லும். இலங்கையில் இக்கோஷ்டி இம்மாதம் 22-ந் திகதி முதலாவது விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ளும்.

# குப்பைத்தொட்டியில் சிசுவின் பிரேதம்!

## விதவையின் சிநேகிதர் குழந்தையின் தந்தையா?

### மரணவிசாரணையில் மர்மம்

தெரனியகலை, வெள்ளி

உடன் பிறந்த குழந்தையொன்றின் பிணம் குப்பைத் தொட்டியில் கிடக்கக் காணப்பட்டதாம். டி. எமலின் நோனு என்பவர் அதைக் கண்டு கரவனெலாப் பொலிசுக்குத் தகவல் கொடுத்தாராம். பொலிஸ் விசாரணை நடாத்தியதன் பேரில் கதிர் கமுவாவைச் சேர்ந்த ரன்மெனிக்கா என்பவர் குழந்தையின் தாயார் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. ரன்மெனிக்கா விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

விசாரணையின்போது தமது கணவர் இரு வருடங்களுக்கு முன்னரே இறந்துவிட்டதாகவும், அதன்பின்னர் தாம் ஒரு நபருடன் சினேகிதமிருந்ததெனவும் ரன்மெனிக்கா கூறினர். தான் சினேகமாகவிருந்தவரேகுழந்தைக்கு தந்தையென்றும் குழந்தை இறந்துதான் பிறந்ததாகையால் அதைத் தாம் குப்பைத்தொட்டியில் வீசியதாகவும் ரன்மெனிக்கா கூறினர்.

ரன்மெனிக்கா குறிப்பிட்ட மனிதரை விசாரித்ததன் பேரில், தனக்கும் ரன்மெனிக்காவுக்கும் எதுவித சிநேகமும் இருக்கவில்லையென்றும் தான் விவாகமாகி எட்டுக் குழந்தைக்குத் தந்தையாக இருப்பவர் என்றும் அவர் கூறினர்.

மேலும் விசாரணை நடத்தும்படி விசாரணை அதிகாரி பொலிசுக்கு உத்தரவிட்டார்.

# நள்ளிரவில் இரத்ததானஞ்செய்து

## தாயையும் சேயையும் காப்பாற்றினர்

### பொலிஸ் கான்ஸ்டபிளின் வள்ளண்மை

யாழ்ப்பாணம், சனி

நள்ளிரவில் பிரசவ வேதனையால் அவஸ்தைப்பட்ட பிரசவ தாய்க்குத் தேவையான இரத்தத்தை தானஞ்செய்து குழந்தையையும், தாயையும்காப்பாற்றியிருக்கிருர் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள்.

இச்சம்பவம்யாழ்ப்பாணம்அரசினர் ஆஸ்பத்திரியில் நேற்று இரவு நடைபெற்றது.

பலவீனமுற்றிருந்த தாய்க்கு இரத்தமேற்ற வேண்டியநிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணம் இரத்தவங்கியில் இரத்தமில்லையாகையால் நள்ளிரவில் எதுவும் செய்யமுடியாது பலரும் துடித்தனர். தாயையும், சேயையும் காப்பாற்ற அந்த நள்ளிரவில் இரத்ததானம் பெறுவது முடியாமற்போய்விட்டது. இந்நிலையில் இந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் (4942) திரு. டுப் ரின் இரத்ததானம் செய்து இருவரையும் காப்பாற்றியிருக்கிருர். தாயும் சேயும் நலமாகவிருக்கின்றனர்.

---

## அநுராதபுரப் படம் விரைவில் வெளிவரும்

கொழும்பு, வெள்ளி

அநுராதபுரம், பழையநகரம் புதிய நகரம் ஆகிய இரு நகரங்களையும் கொண்ட அமைப்புப் படமொன்றை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் விரைவில் வெளியிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அநுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. நிசங்கா விஜயரத்ன இப்படத்தைத் 'தயாரித்துள்ளார். இப்படத்தில் அநுராதபுரத்திலுள்ள முக்கிய இடங்கள் இடம் பெற்றுள்ளன.

---

## காங்கிரஸுக்கு...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

### ராஜாஜியின் மகன் நரசிம்மன்

கிருஷ்ணகிரி பார்லிமெண்ட்டரித்தொகுதிக்குதிரு.சி.ஆர்.நரசிம்மன் தமது அபேட்சை மனுவைத் தாக்கல்செய்தார். நாமக்கல் தொகுதிக்கு தி. மு. க. அபேட்சகர் திரு. வடிவேல் தமது அபேட்சை மனுவைத் தாக்கல் செய்தார்.

## புதிய ஆசிரியர் நியமனம் இல்லை

### கல்வி இலாகா முடிவு

கொழும்பு வெள்ளி

இவ்வருடத்தில் புதிதாக ஆசிரியர்களை நியமிப்பதில்லை எனக் கல்வி இலாகா தீர்மானித்துள்ளது. நடப்பு நிதிவருடத்தில் உதவியாளர்களுக்கு வழங்கப் போதிய பணமில்லாத காரணத்தாலேயே புதிதாக ஆசிரியர்களை இனிமேல் நியமிப்பதில்லை எனக் கல்வி இலாகா தீர்மானித்துள்ளது. வித்தியாதிபதி திரு. எஸ். எப் சில்வாவுக்குத் தனது தீர்மானத்தைத் தெரிவிக்குமுகமாகச் கல்வி இலாகா அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளது.

---

## 10 ஏக்கர் நிலத்தில் கஞ்சா உற்பத்தி!

திசமாரகம, வெள்ளி

ரணவாரவலை என்னுமிடத்துக்கு 5 மைல் தூரத்திலுள்ள போவீவாவுக்குச் சமீபத்தில் 10 ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிரிடப்ப்பட்டிருந்ததை திசமாரகம பொலிசைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எம். பி. சேர்பஞ்சியும் 8 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கண்டுபிடித்தனர் கஞ்சாபயிர் சுமார் 2 1/2 அடி உயரத்துக்கு வளர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

பயிரிடப்பட்டிருந்த 10,000 பயிர்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



# மாணவர் மலர்



## சிறுவனுக்கு கல்வி புகட்டும் விளையாட்டுச் சாமான்கள்

உணர்ச்சியையும், கிளர்ச்சியும் கொடுக்கக்கூடிய இன்றைய விளையாட்டுப் பொருட்களே மிகப் பெரும் புரட்சிகரமான பொருட்களில் ஒன்ருகும். பிரிட்டனிலுள்ள விளையாட்டு பொருள் உற்பத்தியாளர் ஒரு புதிய பொருளின் சாயல் அமைக்குமுன் குழந்தையின் மனதை நன்ருக அறிந்தே அமைப்பர். பொதுவாக குழந்தைகள் தம்கண்ணைக் கவரக் கூடிய பொருட்களையே விரும்புவர். குழந்தைகள் முதல் சில மாதங்களுக்கு மிக மென்மையான விளையாட்டு பொருட்களையே நாடி எடுத்து அதை தமக்கென வைத்துக் கொள்வார்கள்.

இவர்களின் கவர்ச்சிக்கு நிறத்தின் மர்மமே முதலானது. மெல்லிய சிவப்பு முயல், மஞ்சள் நாய், பல நிற யானை ஆகியனவே ஒரு குழந்தையின் கவர்ச்சியாகும். பெரியவட்டம், உறுதியான விளையாட்டுப் பொருளானது தான் ஒன்பது மாத வயதுள்ள குழந்தையின் விளையாட்டுச் சாமானுகும். தவழும் பருவத்தில், எபபடி புகையிரதத்தை தள்ளலாம் என்று கண்டுபிடித்து விடுவான். சில மாதங்கள் சென்றபின் முக்கோண செங்கட்டிகளே ஆராய்ச்சி நடத்த தேவையாக இருக்கும். கட்டுவதும், தங்குவதும் சரியாகப் பொருத்திவிட்டு அப்படியே மரப்பெட்டிக்குள் போடுவதே ஒரு விளையாட்டாக இருக்கும்.

மையற்ற ஊழியர்கள் யாவற்றையும் நிவர்த்தி செய்வதற்கே தயாராக்கப்பட்டது.

---

## 50 ருத்தல் நிறையுள்ள அபூர்வ குழந்தை!

சாதாரண குழந்தையின் எடை என்ன? 'ஆறு ஏழு ருத்தல் இருக்கும்' இப்படி உடனே நீங்கள் சொல்லி விடுவீர்கள். ஆனல் மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள டிரான்ஸ் சாண்டி ஸெண்ட்ஸ் ரயில்வே பிரிவில் ஓடும் ரயிலில் நீங்கள் பிரயாணம் செய்தீர்களாயின் 50 ருத்தல் நிறையுள்ள ஒரு குழந்தையைக் காணுவீர்கள்.

'ரயில் பிரயாணம் செய்து தான் இவனைப் பார்க்கவேண்டுமா?' என நீங்கள் கேட்கலாம். ஆம், இவன் ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் ரயில் நிற்கும் போதெல்லாம் வயிற்றுக்கு ஏதாவது உணவும், வாய்க்குப் புகையிலையும் தேடுவதற்காக அங்கு பெற்ருேருடன் காத்துநிற்பானும்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்த இவனது தாய்க்கும் தந்தைக்கும் இப்பொழுது இவனே சோறு போடுகிருன். அதாவது இவனைக் காட்டிப் பிச்சை எடுத்து அவர்கள் வயிறு வளர்க்கின்றனர்.

---

## படத்தை சரியாக வரைய உதவும் பேனு

பிரிட்டிஷ் கம்பனி சாதன படங்களைக் கூடிய விரைவாகவும், சரியாகவும் வரைய ஒரு மெக்கானிக்கல் பேனுவை உறபத்தி செய்துள்ளது.

இப்பேனு மிஸேஸ் டெயிலர் அன்ட் கொப்ஸன்னுல், வரைவதினுல் வழக்கமாக ஏற்படும் பிரச்சினைகளான, மனித சமுதாய பிழைகள், சோர்வு, திற

---

## சூரிய வெப்பத்தின் பயன்

வெளிச்ச வசதிகளுக்கும், பிற காரியங்களுக்கும் பயன்படுகிற மின் சக்தியை சூரிய வெப்பத்தின் மூலமாக உற்பத்தி செய்யும் சக்திவாய்ந்த பாட்டரிகள் பிரெஞ்சு நாட்டில், தீவிர ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சூரிய வெப்ப சக்தியை நேரடியாக மின் சக்தியாக மாற்றியமைக்கும் முயற்சியில் இது முக்கியமானதொரு கட்டமாகும்.

இதுவரை உருவாக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி யந்திரத்தில் இதுதான் மிகப்பெரியதாகும். பகல் நேரங்களில் சூரிய ஒளியிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்து இரவு நேரங்களில் பயன்படுத்துவதற்கான சிறிய யந்திரமொன்றையும் பிரெஞ்சு விஞ்ஞானிகளும் எஞ்சினியர்களும் கண்டுபிடித் திருக்கின்றனர். கையில் எடுத்துச் செல்லக் கூடிய இந்த விளக்குகள் நெடுநேரம் தொடர்ந்து எரியும்.

சூரிய வெப்ப மின்சார உற்பத்தி யந்திரங்கள், முன்னேற்றமடைந்திராத நாடுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

### ரசாயன மாறுபாடுகள்

ரசாயன ரீதியான மாறுபாடுகளை, வரிசை முறையாக, வெகுவாகவும் துரிதமாகவும், துல்லியமாகவும், நிர்ணயிப்பதற்கான முறையொன்றை வாஷிங்டன் தேசிய தரநிர்ணயப்பூரோ கண்டுபிடித்திருக்கிறது. ரசாயன ரீதியான மாறுபாடுகளின் வரிசையைப் பற்றித் தெரிந்து கொண்டால் அதன் வேகத்தை எளிதாக தெரிந்துகொள்ள முடியும். ஆகவே இது ரசாயன எஞ்சினியர்களுக்கும், தொழிலியல் ரசாயன நிபுணர்களுக்கும் பெரிதும் பயன்படும். கணித ஆராய்ச்சியில் பயிற்சியில்லாதவர்களும்கூட இம் முறையைக் கையாள முடியுமாதலால் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

---

## அன்னையின் யுக்தி

விளக்கை அவிப்பது தீய சகுனம். உண்ணும்போது விளக்கை அணைத்தால் பழங் காலத்துப் பெரியோர் உண்ணுமல் எழுந்து விடுவார்களாம்.

சங்கராச்சாரியார் என்னும் பழைய தத்துவஞானியின் சரித்திரத்தில் இந்த வழக்கத்தைக் காண்கிருேம். இவர் இளம் பிள்ளையாக இருக்கும் போது ஒரு சமயம் குளத்துக்குச் சென்ருராம். இருட்டில் அவர் குளத்தில் இறங்கிய போது, அவருடைய காலை ஒரு முதலை பிடித்துக்கொண்டதாம். அப்போது "என் தாயாரிடம் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று முதலைக்குச் சத்தியம் செய்துகொடுத்து விட்டு சங்கரர் அன்னையிடம் வந்து எல்லாவற்றையும் சொன்னராம். அன்னை கவலைப் பட்டாள். என்ருலும் வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை. சங்கரர் திரும்பவும் குளத்துக்குச் சென்றபோது அவர் அன்னை அவர்பின்பு ஒரு விளக்கை மரக்காலுக்குள் கொண்டு சென்ருர்.

சங்கரர்குளத்துக்குச் சென்று முதலையைப் பார்த்து "இனி என்னை உன் விருப்பப்படியே செய்யலாம்" என்ருர். முதலை அவரை உண்ணத் தொடங்கும் போது பின்னுல் நின்ற அன்னை திடீரென்று மூடியிருந்த விளக்கை வெளியே காட்டி உடனே அணைத்து விட்டாள். முதலை, "ஐயோ! தீய சகுனம் நேர்ந்துவிட்டது. உணுணும் போது விளக்கு அணைந்து விட்டால் அந்த உணவை உண்ணக்கூடாது. நான் உன்னை உண்ணுமல் விட்டுவிடுகிறேன். நீ போ என்று சொல்லித் திரும்பிவிட்டதாம்.

---

## சூரிய வெப்பப் பாட்டரிகள்

வெளிச்ச வசதிகளும் பிற காரியங்களுக்கும் பயன்படுகிற மின்சக்தியை சூரிய வெப்பத்தின் மூலமாக உற்பத்தி செய்யும் சக்திவாய்ந்த பாட்டரிகள் பிரஞ்சு நாட்டில் தீவிர ஆரார்ய்ச்சியின் பயனுகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சூரியவெப்ப சக்தியை நேரடியாக மின் சக்தியாக மாற்றி அமைக்கும் முயற்சியில் இது முக்கியமானதொரு கட்டயாகும் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி இயந்திரத்தில் இது தான் மிகப் பெரியதாகும். பகல் நேரங்களில் சூரிய ஒழியிலிருந்து மின்சக்தியை உற்பத்தி செய்து இரவு நேரங்களில் பயனபடுத்துவதற்காக சிறிய இயந்திரம் மொன்றையும் பிரன்சு விஞ்ஞானிகளும் எஞ்ஜினியர்களும் கண்டுபிடித்திருக்கிறனர். கையில் எடுத்து செல்லக் கூடிய இயந்தவிளக்குகள் நெடு நேரம் தொடர்ந்து எரியும்.

சூரிய வெப்ப மின்சார உற்பத்தி இயந்திரங்கள், முன்னேற்றமடைந்திராத நாடுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்

---

## பறக்கும் சைக்கிள்

சதாம்ப்டன் பல்கலைக்கழகத்தில் மிஸ் ஆன் மார்ஸ்டன் தலைமையில் செயலாற்றும் ஒர் மாணவர் குழுவினர் பறக்கும் சைகிள் ஒன்றை தயாரித்திருக்கிருர்கள். விசைப் பொறியில்லாமல், காலின் வலிமையால் இயங்கும் இந்த சைகிளின் எடை 130 ராத்தல்கள். இறக்கைகளின் நீள் விளிம்புக்கு விளிம்பு 80 அடி.

ஹாம்ப்ஷயரிலுள்ள லாஷாம் விமான தளத்தில் இந்த சைகிளை வெள்ளோட்டம் விட்டுப் பார்க்க ஏற்பாடு நடந்து வருகிறது, ஒலிம்பிக் விளையாட்டு வீரரும் விமான சோதனை வீரருமான திரு. மாட்டின் ஹைமன் இந்த சைகிளை விண்ணிலேற்றி பறப்பார்.

டீஹாவிலாந்து விமானக் கம்பனியும் பறக்கும் சைகிள் ஒன்றை தயாரித்திருக்கிறது. ராயல் ஏரோ நாடிகல் சொசைடி இந்த இரண்டு முயற்சிகளையும் ஆதரித்து தலா 1500 பவுன்கள் மான்யம் வழங்கியிருக்கிறது.

---

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு தை மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை (20-1-62) இரவு 12-20 வரை பூரணைத்துதி மாலை 5-19 வரை புனர்பூசம், சித்தயோகம், பொருள்கள் வாங்க விற்க நல்லது. தானிய வகைகள், இரும்புச் சாமான்கள், வெள்ளி, வைரம், புடவை முதலியன விற்பனை செய்வது நன்மை தரும்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் ஜனனமானவர்களுக்கு முற்பகுதியில் சிறிது கஷ்டங்களுடன் நற்கருமங்கள் கலந்திருக்கும். சித்திரை முதல் ஆடி வரை நற்காலமாகவும் வருட பலன் தருவதாகவும் இருக்கும். கஷ்டங்கள், விபத்துக்கள், கஷ்டமான பிரயாணங்கள், வழக்குக் கணக்குகள், சண்டை சச்சரவுகள், தேக நலக்குறைவு, வீரிய நட்டம், மன நிம்மதியீனம், எதிரிகளலால் கஷ்டங்கள் ஆகியன காணப்படுகின்றன. பொதுவாக நிதானமாகவும் தைரியமாகவும் தேக நலத்தை பாதுகாத்து நடப்பது அவசியம். பெண்களுக்கு எதிர்ப்பாலாரிடம் எதிர்பார்க்கும் விசேடங்கள் ஏமாற்றமளிப்பனவாக இருக்கும். குடும்பக் கஷ்டங்களும் காணப்படுகின்றன. தெய்வவழிபாடு தான் கஷ்டங்களை நிவர்த்தித்து சுகத்தை அடையச் செய்யும்.

| நட்சத்திரம் | பலன் |
|---|---|
| அச்சுவினி | கடும் உழைப்பு, பலமின்மை, கவலை. |
| பரணி | முயற்சி வெற்றி, சுகம், தைரியம். |
| கார்த்திகை | குடும்பத்தில் நலக்குறைவு, வைத்தியச்செலவுகள். |
| ரோகிணி | பெரியார் உதவி, செய்தொழில் வெற்றி. |
| மிருகசீரிடம் | எதிரிகளால் துன்பம், முதியோர் பகை. |
| திருவாதிரை | இனசன கொண்டாட்டம், நற்கருமம் வெற்றி. |
| புனர்பூசம் | கஷ்ட பிரயாணம், செய் காரிய கேடு, கவலை. |
| பூசம் | பண வரவு, தொழில் வெற்றி, நன்மை. |
| ஆயிலியம் | மாதா வழி உதவியும், ஊக்கமும், கலகம். |
| மகம் | கடும் முயற்சி, வரவு தாமதம், மந்த விலை. |
| பூரம் | நற்செய்தி, மன உற்சாகம், மகிழ்ச்சி. |
| உத்திரம் | கடும் உழைப்பு, ஞாபக மறதி, கஷ்டம். |
| அத்தம் | கடன் பணம் வரவு, கஷ்டம் நீங்குதல். |
| சித்திரை | வீண் பேச்சு, நண்பர் விரோதித்தல், கஷ்டம். |
| சுவாதி | நற்பிரயாணம், காரிய வெற்றி. |
| விசாகம் | வீண் கஷ்டம், அதைரியம், காரிய நட்டம். |
| அனுஷம் | செய் தொழில் அபிவிருத்தி, பண வரவு. |
| கேட்டை | குடும்பத்தில் சந்தோஷம். |
| மூலம் | அனுவசிய உழைப்பு, பணத் தாமதம், கஷ்டம். |
| பூராடம் | நற்செய்தி, தொழிற் சித்தி, லாபம். |
| உத்தராடம் | அலைச்சல், அகால உணவு, மறதி, கஷ்டம். |
| திருவோணம் | மன நிம்மதி, நண்பர் ஆதரிப்பு, சுகம். |
| அவிட்டம் | கடன் தொல்லை, நிம்மதியின்மை, கஷ்டம். |
| சதயம் | பணவரவு, தொழில் அபிவிருத்தி. |
| பூரட்டாதி | புதுமுயற்சி தடைபடல், சகோதரர் விரோதம். |
| உத்தரட்டாதி | குடும்ப ஒற்றுமை, சந்தோசம். |
| ரேவதி | முயற்சி வெற்றி, மதிப்பு, புகழ், சந்தோஷம். |



அண்மையில் பிரிடவுனுக்கு விஜயம்செய்த எலிஸபெத் மகாராணி, சீரு லியோன் நாட்டுப்பிரதமர் சர் மில்டன் மார்காயுடன் காணப்படுகிருர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

சனி 20-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்வத நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 மனோன்மணி கனகசபாபதி - பாட்டு.

இரவு 7-15 கண்டதும்கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 லலிதா செபரத்தினம்-பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

ஞாயிறு 21-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 தேர்ந்தஇசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம் - 17, 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம். 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-10 குரல்வகை, 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-30 தங்கராணி கனகசபை - பாட்டு 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'வனையாபதி' - நாடகம், 9-45 தேர்ந்தஇசை. 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7 - 15, பகல் 2, இரவு 7-15.)

சனி 20-1-62

காலை 6-45 மங்களஇசை. 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 தஞ்சாவூர் ஆர். நடராஜன் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1 20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 தஞ்சாவூர் ஆர். நடராஜன்-வயலின்

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'எதிரி' - துப்பறியும் நாடகம், 8-15 திரைப்பட இசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

ஞாயிறு 21-1-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 இ. ஜி. ஜயலட்சுமி - பாட்டு, 8-15 திருவாரூர் டி. எஸ். ராஜரத்தினம்பிள்ளை - நாகஸ்வரம்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி - கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 புல்லாங்குழல், 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சீர்காழி கோ சதாசிவம்பிள்ளை - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சாவேரி ராக மஞ்சரி - 5-வது பகுதி, 8-30 இ. ஜி. ஜயலட்சுமி - பாட்டு. 9-15 வாத்தியஇசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.

# பாடசாலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை

## கல்வி இலாகா முன்மாதிரித் திட்டம்

கொழும்பு, வெள்ளி — பாடசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்கென்று ஒரு ஸ்தாபனத்தை நிறுவ வேண்டுமென்ற கல்வி இலாகாவின் முன்மாதிரித் திட்டம் பற்றி பாடசாலைகள் தேசிய சேவை பற்றி தேசியக் கமிட்டி பரிசீலனை செய்து வருகிறது.

பாடசாலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்ய வேண்டுமென்ற முன்மாதிரித் திட்டத்துக்கான யோசனை மாகோ மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களிடமிருந்து வந்ததாக கல்வி இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

உபயோகமான பலவேறு வகையான பொருள்களைப் பல பாடசாலைகள் உற்பத்தி செய்கின்றனவாகவும் இப்பொருள்களை விற்பதன் மூலம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அப்பணத்தை உபயோகிக்கலாமென்று கல்வி இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி பாடசாலைப் பிள்ளைகள் தயாரித்த பொருள்கள் முதலில் காட்சிக்கு வைக்கப்படுமென்றும் அவற்றில் சிறந்தவைகளுக்குப் பரிசு பத்திரம் வழங்கப்படுமென்றும் தெரிகிறது. இத்திட்டத்தின்படி ஏப்ரல் முதல் வாரத்தில் இப்பொருள்கள் கொழும்பில் விற்பனைக்கு வைக்கப்படுமென்று தெரிகிறது.

இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் பொருள்களின் விற்பனையால் கிடைக்கும் பணத்தில் 20 சத விகிதம் அவற்றை உருவாக்கிய மாணவருக்கும் 50 சத விகிதம் ஆசிரியருக்கும் மிகுதி 30 சத விகிதம் பாடசாலைக்கும் வழங்கப்படும்.

### பாரத பொருள்கள் காட்சிசாலை

கெய்ரோ, [illegible] — கெய்ரோவில் பாரதப் பொருள்களின் காட்சி அறையொன்று திறக்கப்பட்டுள்ளது. பாரத உற்பத்திப் பொருள்களை இக் காட்சி மூலம் பிரபலப்படுத்தப்படும்.

## யாழ்ப்பாணத்தில் இசைக்கல்லூரி

யாழ்ப்பாணம், வெள்ளி — இசையாளருக்கென ஓர் இசைக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் அமைப்பதென்றும், இதற்காக சேமலாபநிதியொன்றை ஆரம்பிப்பதெனவும் யாழ்ப்பாணம் இசையாளர் ஒத்துழைப்புச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தின் கூட்டம் சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ். அப்புலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இசையாளர்கள் எல்லோரும் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் வாழவேண்டுமென தலைவர் தமது உரையில் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் திரு. டி. இரத்தினகோபாலும் [illegible] பேசினர்.



# தந்தையின் தலையை வெட்டி எறிந்த தனயன்!

ஈரோடு, ஜன 19

சொத்து பாகப்பிரிவினை தகராறு காரணமாக, தந்தையின் தலையை வெட்டிய மகன் அவரது தலையையும் முண்டத்தையும் கால்வாயில் எறிந்துவிட்டதாக ஈரோடு தாலூக்கா பொலிசிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

கீழ்பவானி வாய்க்காலில், ஆனைக்கல்பாளையம் அருகில் அடையாளம் தெரியாத முண்டமொன்று மிதந்துவந்தது காணப்பட்டது. நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவருடைய உடலொன்றும், சந்தேகாஸ்பதமான நிலையில் கிடந்தது என்றும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக ராமண்ணை கவுண்டரின் மகன் சின்னசாமி கவுண்டன் (26 வயது) கைது செய்யப்பட்டிருக்கிறார். இரத்தக்கறையுடன் ஒரு அரிவாளும் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

இருவருக்கும் சொத்துவிஷயமாக மனஸ்தாபம் இருந்ததென்றும் ஜனவரி 7ந் திகதியன்று மாலையில் தந்தையின் தலையை அரிவாளால் வெட்டி தலை, உடல் இரண்டையும் கால்வாயில் எறிந்திருக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

## வித்துவான் பாராட்டு விழா

### பண்டிதமணி வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

வித்துவான் ந.சுப்பையாபிள்ளையின் பாராட்டு விழாவை முன்னிட்டு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அனுப்பிய வாழ்த்துச் செய்தி வருமாறு:

"திருவாளர்கள் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களும், சீதாராம சாஸ்திரியார் அவர்களும் யாழ்ப்பாணத்துக்குக்கிடைத்த இருபெரும் வரப்பிரசாதங்கள்.

வித்துவான் அவர்கள் இளைப்பாறியிருக்கும் இத் தருணத்தில், பாராட்டுவிழா எடுக்க நினைத்தது பெரிதும் பாராட்டற்பாலது. அவர்களின் அருமையை அறிந்தவர்கள் பல்வேறு இடங்களில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும்தொடர்புகொள்ளத்தக்க வகையில், வெகு சிறப்பானமுறையில் விழா எடுக்கப்படும் என எண்ணுகிறேன்".

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா சிவாஜி கணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்.

●

சாவகச்சேரி தேவேந்திரா: சிவாஜி கணேசன், பி. சரோஜா தேவி நடித்த விடிவெள்ளி.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் – மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

★ உண்மை இலட்சியம்!
★ அன்புத் தியாகம்!!
★ உணர்ச்சி ஏக்கம்!!!

மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

# பெண்ணைக் கடத்தியதாக குற்றச்சாட்டு

மாவிட்டபுரம், வெள்ளி

பத்தமேனியைச்(அச்சுவேலி) சேர்ந்த சின்னம்மா சின்னத்துரை என்னும் பெண், கடந்த புதன்கிழமை இரவு தன்னுடன் படுத்திருந்த 15 வயது நிரம்பிய இராசம்மா என்னும் தனது மகளைக் காணவில்லை என்று காங்கேசன்துறைப் பொலிஸில் நேற்றுக் காலை முறையிடவே காங்கேசன் துறைப் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. தியாகராசா உடனே ஸ்தலத்துக்குச்சென்று விசாரணை நடாத்தி நண்பகல் 12 மணியளவில் யுவதியையும், கரணவாயைச்சேர்ந்த இராமன் துரைசாமி என்பவரையும் அவ்வூர் வாசியான கதிரன் செல்லன் வீட்டில் வைதது்க் கைதுசெய்தார்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் யுவதியான சின்னத்துரை இராசம்மா சாட்சியமளிக்கையில், தாங்கள் சுமார் நாலுமாத காலமாகக் காதலர்களாக இருப்பதாகவும் காதலன் திடீரென கடந்த ஒருவாரகாலமாக வீட்டுக்கு வராமல்போகவே அவரைப் பார்ப்பதற்காக, தான் நள்ளிரவில் வீட்டைவிட்டுப் புறப்பட்டதாகவும் கூறினர்.

பொலிசார் மற்றவர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்த பின்னர் இருவரையும் மல்லாகம் நீதிபதிமுன்னிலையில் ஆஜர் செய்யவே நீதிபதி துரைசாமியை ரிமாண்டிலும், அப்பெண்ணை இரட்சண்யசேனை விடுதியிலும் பொலிஸ் விசாரணை முடிவுறும்வரை வைக்கும்படி உத்தரவிட்டார்.

## சிகரட் புகையிலை வளர்க்கும் சங்கங்கள்

### அரசாங்கம் கடன் வழங்கும்

கொழும்பு, வெள்ளி

சிகரட் புகையிலையை வளர்க்க விரும்பும் சங்கங்களுக்கு கடனளிக்கும் நடவடிக்கை விரைவில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சங்கத்துக்கும் 2 சத விகித வட்டியில் ரூ 7500 வழங்கப்படும். 10 வருடங்களில் இத்தொகை திருப்பியளிக்கப்படவேண்டும்.

## கிரிக்கெட்

டாக்கா, ஜன. 19

பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் தன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 175 ரன்கள் எடுத்தது.

## 8 கிரக சேர்க்கை அரசாங்கத்துக்கு நல்லது

—எம். பி.

"எட்டுக் கிரகங்கள் ஒன்றுகூடியபின்னர் அரசாங்கம் விழுந்துவிடும் என சில அரசியல்வாதிகள் நாடுமுற்றிலும் சென்று கூறிவருகின்றனர். ஆனல் அப்படியொன்றும் அரசாங்கத்துக்கு நேர்ந்துவிடாது. இந்தச் சேர்க்கையால் அரசாங்கம் மேலும் சக்திவாய்ந்ததாகவே மாறும்" என பிங்கிரியா எம். பி. திரு. எல். பி. ஜயசேன, ராஜமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: 'உள் நாட்டிலுள்ள கிரகங்கள்'சமூகத்துக்குப்பெரும் தலையிடியைக் கொடுத்துவருகிறார்கள். இவர்களுக்கு அரசாங்கம் எந்தவித கருணையும் காட்டாது.

# "மேலை நாடுகள் ஊக்குவித்ததே பாகிஸ்தான் பிடிவாத போக்குக்கு காரணம்"

புதுடில்லி, ஜன. 17

கடந்த 14 ஆண்டுகளாக பாகிஸ்தானின் பிடிவாதப் போக்கை அமெரிக்காவும் இதர மேற்கத்திய நாடுகளும் ஊக்குவிக்கா திருந்திருக்குமானல் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் ரீதியில் பாகிஸ்தான் அதிக அளவு நியாயமான போக்கை மேற்கொண்டிருக்கும் என்று இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

காஷ்மீர்பிரச்சினையின் மாறுபட்ட சூழ்நிலையை பிரத்தியட்சபூர்வமாக உணருமாறு பாகிஸ்தானை மேலை நாடுகள் தூண்டினால்தான் உடன்பாடு சாத்தியம் என்று இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன. தற்போதைய போர்நிறுத்த எல்லைக்கோடு அடிப்படையில் உடன்பாடு என்ற நல்லெண்ண சமிக்ஞையை யொட்டி, மேற்கத்திய வல்லரசுகள் தங்களது வேண்டுகோள்களை இரு நாடுகளுக்கும் விடுப்பதற்குப் பதில் பாகிஸ்தானுக்கு மட்டும் விடுக்குமென நம்பப்படுகிறது.

காஷ்மீர், கோவா சம்பந்தமாக இந்தியா இருவித போக்கைக் கையாளுகிறது என்ற ஒரு அமெரிக்க நிருபரின் குற்றச்சாட்டுக்கு கென்னடி அளித்த பதில் முக்கியத்துவம் வாய்ந்தது. இரட்டை நிலை என்ற குற்றச்சாட்டு இதர பல விஷயங்களுக்கும், இதர பல நாடுகளுக்கும் பொருந்தும் என்று கென்னடி தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

## நீர்வேலியில் அட்ட கிரகதோஷ நிவாரண வழிபாடு

நீர்வேலி, வெள்ளி

எட்டுக்கிரகங்களும் மகரராசியில் ஒன்றுசேர்வதினால்வரும் இன்னல்களை நிவர்த்திசெய்வதற்காக நீர்வேலி கந்தசாமி கோயிலில் நாளாந்தம் மார்கழி திருவாதிரை நட்சத்திர தினத்திலிருந்து கோளறுபதிகம் மாலையில் பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 25, 26, 27-ம் திகதிகளில் அபிடேக அர்ச்சனை பூஜா வழிபாடுகள் செய்யவும் ஏற்பாடாகியுள்ளது.

## ஸ்ரீ மேனன் உட்பட 7 பேர் அபேட்சமனு தாக்கல்

பம்பாய், ஜன 19

தற்போது யூனியன் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன் பிரதிநிதித்துவம் வகிக்கும் வடக்கு பம்பாய் பார்லிமெண்டரித் தொகுதிக்கு இதுவரை 7 பேர் தங்களது அபேட்சைப் பத்திரங்களைத் தேர்தல் அதிகாரியிடம் தாக்கல்செய்திருக்கின்றனர்.

ஸ்ரீ கிருஷ்ணமேனன், ஸ்ரீ கிருபளானி, ஸ்ரீ பியாரிலால் ராம்சந்த், ஸ்ரீ ஜீவன் நாராயண் ராம்ஜி ஆகியோரின் அபேட்சாபத்திரங்கள் பம்பாய் சபர்பன் ஜில்லா அடிஷனல் கலெக்டரிடம் தாக்கல் செய்யப்பட்டன. ஸ்ரீ வி. பி. கோக்லே (இந்து சபா), மற்றும் இரு சுயேச்சைகளான ஸ்ரீ சுதீர் ஹெண்டரே, ஸ்ரீ ஜி. ஜே.மோடி ஆகியோரின் அபேட்சை மனுக்கள் கடந்த சனிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டன.

தெற்கு பம்பாய் பார்லிமெண்டரி தொகுதி சம்பந்தப்பட்டவரை யூனியன் மந்திரி ஸ்ரீ எஸ். கே. பாட்டேல் தமது அபேட்சை மனுவை தாக்கல் செய்தார். இத்தொகுதிக்கு ஸ்ரீ வி. என். மேத்தா (சுயே) நேற்று முன்தினம் தமது அபேட்சா பத்திரத்தை தாக்கல் செய்தார்.

## இஸ்ரவேலில்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ழில்களில் நான்குமடங்கு அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம், அரசாங்கத்தை நம்பியிராது தாமாகவே வருந்தி உழைக்கும் தன்மை மக்களிடம் இருந்ததும், தம்மைத் தக்க நிலைக்குக் கொண்டுவரவேண்டிய அவசியமிருந்தமையுமே ஆகும். இவற்றுக்கு அனுசரணையாக அரசாங்கக் கட்டுப்பாடின்றி மக்களால் தமக்கென வகுக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் கைகொடுத்துதவியது. சமுதாய அடிப்படையில்லாத தேசிய அடிப்படையும் மக்கள் மனதில் வேரூன்றி இந்த முன்னேற்றத்திற்கு வழியமைத்தது.

எந்த சூழ்நிலையிலும், எக்காலத்திலும் எதற்கும் ஏற்றதாக தம்மை உட்படுத்த மக்கள் ஆயத்தமாக இருந்தமையால் எப்பிரச்சினையும் சுலபமாகத் தீர்க்கக்கூடியதாக இருந்தது. இஸ்ரவேலுக்கு இருந்தமுக்கிய வரப்பிரசாதம் என்னவென்றால் உலகின் எங்குப்பகுதியிலிருந்த யூதர்களும் இஸ்ரவேலுக்குத் தேவையானஉதவியை அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

டாக்டர் விக்கினராசா நன்றி தெரிவித்துப்பேசுகையில், இஸ்ரவேலுக்கும் எமது நாட்டிற்கும் வெட்ப தட்ப நிலையில் சமத்துவ நிலையிருப்பதாகவும் முன்னேற்றமடைந்த அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நாம் பின்பற்றவேண்டுமென்றும் நமது இளைஞர்களுக்கு இஸ்ரவேலில் நல்ல வேலை வாய்ப்பிருப்பதாகவும் கூறினர்.

## கைதிகள் தப்பி ஓட முயன்றனர்

பஞ்சிம்,ஜன. 19

கோவாவில் ஓரிடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த போர்த்துக்கேய கைதிகள் தப்பியோட முயன்றதாய் அறிவிக்கப்படுகிறது. இந்தியாவும் போர்த்துக்கலும் விரும்பினால் கோவாவிலுள்ள போர்த்துக்கல் கைதிகளை பிரிட்டிஷ் கப்பல்களில் கொண்டுபோகத் தாம் தயாராய் இருப்பதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

## சுழிபுரத்தில் மிருகபலி நிறுத்தப்பட்டது

சுழிபுரம், சனி

பல ஆண்டுக்காலமாக சுழிபுரம் பத்திரகாளி கோவிலில் நடைபெற்று வந்த மிருகபலி சுழிபுரம் மிருகபலி நிறுத்துச் சபையின் முயற்சியால் இவ்வாண்டுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. இனிமேல் மிருகபலி இக்கோவிலில் நடைபெறமாட்டாது.

யாழ்ப்பணத்து சைவப் பெரியார்கள் பலரதும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கத்தினதும் ஒத்துழைப்புடன் இச்சபை இக்கோவில் முகாமைக்காரர்களிடம் மிருகபலியை நிறுத்துவதற்கான சம்மதத்தை எழுத்துமூலம் இபபொழுது பெற்றிருக்கிறது.

பம்பாய் சென்ட்ரல் தெற்கு, பம்பாய் சென்ட்ரல் வடக்குத்தொகுதிகளில் இதுவரை அபேட்சகர் யாரும் அபேட்சை மனுவைத் தாக்கல் செய்யவில்லை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரிமாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.